**கவனிக்க.**- *20.12.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி III ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1843 - 2013 දෙසැම්බර් මස 27 වැනි සිකුරාදා - 2013.12.27

*1843 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1700 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1708 |


**கவனிக்க.**- (i) *தயா சரண அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2014, சனவரி மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, சனவரி 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - புத்தளம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, தை மாதம் 27 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, மார்கழி 05.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| புத்தளம் | கல்பிட்டி | நுரைச்சோலை பிரிவில் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், புத்தளம் |

12-986

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போயன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, தை மாதம் 27 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, மார்கழி 07.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | பேருவளை | மருதானை பகுதி களுத்துறை மற்றும் பாணந்துறை-தொட்டமுனை பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், களுத்துறை |

12-985

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - அனுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போயன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, தை மாதம் 27 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, மார்கழி 09.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | நுவரகம்பலாத்த மத்திய | ஹூம்பிரிகஸ்வேவ பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் நுவரகம்பலாத்த பிரிவில் விவாகப் (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர், மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், அனுராதபுரம் |

*12-1078*

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, தை மாதம் 27 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, மார்கழி 11.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | ஊவா பரணகம | ஊகின்ட (உடுஹவர மற்றும் பரணகம) பிரிவில் மேலதிக விவாகப் (பொது/ கண்டிய) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர், மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், பதுளை |

*12-1233*

**2013, திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட குருநாகலை மாவட்டத்தின் அலவ்வ பிரதேச செயலாளர் பிரிவின் தம்பதெனி உடுகஹா தெற்கு பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் தம்பதெனி ஹத்பற்று பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கோரல் அறிவித்தலினை இரத்துச் செய்தல்**

*மேற்படி பதவிக்காக 2013.06.28 ஆந் திகதிய 1817 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்ததுடன் 2013.12.13 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட அவ்வர்த்தமானி அறிவித்தலினை இத்தால் இரத்துச் செய்கின்றேன்.*

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, திசெம்பர் 10.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | அலவ்வ | குருநாகல் மாவட்டத்தின் தம்பதெனி உடுகஹ தெற்கு பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் தம்பதெனி ஹத்பற்று பிரிவில் விவாகப் (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர், மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர்/ அலுவலகம், குருநாகல் |

12-1234

---

**கமநல நியாய சபைகளை நியமித்தல் - 2014/2017**

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

**கமநல அபிவிருத்தித் திணைக்களம்**

3 வருட காலத்தின் பொருட்டு 25 கமநல நியாய சபைகளை நியமித்தல் தொடர்பாக 2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் ஆகிய என்னால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

இங்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய விண்ணப்பதாரிகளினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2014, சனவரி மாதம் 27 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் எனக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கமநல நியாய சபைகள்" எனக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் எனக்கு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்துடன் ஆவணங்களின் மூலப்பிரதிகள் அனுப்பி வைக்க வேண்டியதில்லை.

**குறிப்பு**.- மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

2. **ஆட்சேர்ப்பு முறை**.- அறிவித்தலில் காட்டப்பட்டுள்ளவாறு தகைமைகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்கள் வெற்றிடமாகவுள்ள எண்ணிக்கைக்கமைய சேர்த்துக்கொள்ளப்படுவர்.

3. **வயதெல்லை**.- விண்ணப்பதாரர்கள் 70 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

4. **தொழில் தகைமைகள்**.- (1) 7 வருடத்திற்குக் கூடுதலான அனுபவமுடைய ஓய்வுபெற்ற நீதிபதியொருவராக இருத்தல்.

(2) நிறைவேற்று தரத்தில் 7 வருட சேவைக்காலத்தையுடைய ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் (வெளிக்கள அனுபவம் தொடர்பாக இங்கு விசேட அவதானம் செலுத்தப்படும்.)

5. சேர்த்துக்கொள்ளப்படும் எண்ணிக்கை.- 25 பேர்.

6. ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் கால எல்லை.- 3 வருட காலங்கள்.

7. (அ) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

8. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றை அல்லது எல்லாவற்றையும் வேண்டும்போது சமர்ப்பிப்பதற்கு இயலுமாகயிருத்தல் வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) சேவைச் சான்றிதழ் ;
(இ) தொழில் தகைமை தொடர்பான சான்றிதழ் ;
(ஈ) சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி மூலம் சித்தியடைந்துள்ள ஆகக்கூடிய பரீட்சை தொடர்பான சான்றிதழ்கள்.

9. இப்பதவியின் பொருட்டு சேர்த்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர்கள் இலங்கையின் எந்தப் பகுதியிலும் கடமையாற்றுவதற்கும் பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியான தகுதியானவராகயிருத்தல் வேண்டும்.

10. இப்பதவியின் பொருட்டு மாதாந்தம் ரூபா 28,740 கொடுப்பனவும் ரூபா 5,000 மாதாந்த மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும்.

எம். ஏ. எஸ். வீரசிங்ஹ,
கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்.

கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
இல. 42, சேர். மார்க்கஸ் பிரனாந்து மாவத்தை,
கொழும்பு 7,
2013, திசெம்பர் 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கமநல அபிவிருத்தித் திணைக்களம்**

*கமநல நியாய சபையின் பொருட்டு நியமனம்*

1. முழுப்பெயர் :----.
2. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
3. நிரந்தர வதிவிடம் :----.
4. முகவரி :----.
5. பிறந்த திகதி :
   ஆண்டு ----, மாதம் ----, திகதி ----.
6. வயது :
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
7. இனம் :----.
8. சமயம் :----.
9. திருமணமான/திருமணமாகாத :----.
10. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
11. தொலைபேசி இலக்கம் :----.
12. கல்வித் தகைமைகள் :----.
13. சேவை அனுபவங்கள் :----.
14. தொழிற் தகைமைகள் :----.
15. வாசிக்க, எழுத மற்றும் கதைப்பதற்கு இயன்ற மொழிகள் தொடர்பான விபரங்கள் (உரிய கோட்டினுள் (✓) அடையாளத்தை இடவும்) : ----.

| மொழி | வாசித்தல் | | | எழுதுதல் | | | கதைத்தல் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மிக நன்று | நன்று | குறைவு | மிக நன்று | நன்று | குறைவு | மிக நன்று | நன்று | குறைவு |
| சிங்களம் | | | | | | | | | |
| தமிழ் | | | | | | | | | |
| ஆங்கிலம் | | | | | | | | | |

16. கமநல அபிவிருத்திச் சட்டம் தொடர்பாக தேர்ச்சிகள் உண்டா ? (ஆம்/இல்லை) :----.
பெற்றிருப்பின், இத்தேர்ச்சியினைப் பெற்றுக்கொண்ட முறை பற்றிய விபரங்கள் :
..........................................................................................
..........................................................................................

17. தாங்கள் ஓய்வுபெற்ற நீதிபதியொருவரா ? இல்லையெனில் ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தரா ?

| | | |
|---|---|---|
| 1 | நீதிபதியொருவர் | |
| 2 | ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் | |

18. சேவைகள் தொடர்பான தகவல்கள் :

| சேவை | தொழில் தொடர்பான கால எல்லைகள் | | வகித்த பதவிகள் | சேவை நிலையங்கள் |
|---|---|---|---|---|
| | தொடக்கம் | வரை | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

19. சொந்தமான சொத்துக்களின் பெறுமதி : ரூபா :----.
20. தங்களது மாதாந்த வருமானம் : ரூபா :----.
21. கடந்த 10 வருட காலத்தினுள் தாங்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளீரா ? :----.
22. வருமான வரி செலுத்துபவரா ? :----.
23. தங்களுக்கு எதிராக நீதிமன்றமொன்றில் குற்றம் தொடர்பான வழக்குகள் தொடரப்பட்டுள்ளதா ? :----.
24. நீதிமன்றத்தில் தண்டனை பெற்றிருப்பின் அவற்றின் விபரம் :----.
25. தங்களது சுயவிபரங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியவர்களின் விபரங்கள் (அவர்கள் தங்களை நன்றாக அறிந்த பொறுப்பு வாய்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்) :----.

1. பெயர் :----.
முகவரி :----.
தொழில் :----.
தொலைபேசி இலக்கம் :----.
தாங்கள் அறிமுகமான காலப்பகுதி :----.

2. பெயர் :----.
முகவரி :----.
தொழில் :----.
தொலைபேசி இலக்கம் :----.
தாங்கள் அறிமுகமான காலப்பகுதி :----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதி மொழிகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.
குறிப்பு.- (சகல சான்றிதழ்களின் பிரதிகளையும் இத்துடன் இணைக்கவும்.)

12-1163

---

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

காால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் வகுப்பு II தரம் II இல் காணப்படும் கால்நடை வைத்திய அதிகாரி பதவி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரல் - 2013

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் II ஆம் வகுப்பின் II ஆம் தரத்தில் கால்நடை வைத்திய அதிகாரி பதவிகளில் 2013.09.30 ஆந் திகதியன்று நிலவிய நாற்பது (40) வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு தகைமையுடையோரை தெரிவுசெய்வதன் நிமித்தம் மிருக வைத்திய விஞ்ஞானத்துறை பட்டதாரிகளிடம் இருந்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைய விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியாவாறு "பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், த. பெ. இலக்கம் 13, கெட்டம்பே, பேராதனை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் II ஆம் வகுப்பு II ஆம் தரத்தில் கால்நடை வைத்திய அதிகாரி பதவி" எனும் சொற்றொடர் மிகத் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதி 2014.01.17 ஆந் திகதியாகும்.

**குறிப்பு.-** *விண்ணப்பம் அல்லது அது தொடர்பான கடிதம் ஏதும் தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமாகி விடுதல் போன்ற எத்தகைய முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதி வரை விண்ணப்பத்தினை தாமதப்படுத்துவதால் ஏற்படும் நட்டங்களுக்கு விண்ணப்பதாரரே பொறுப்பாவார். அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

*கால்நடை வைத்திய அதிகாரி பதவியின் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவோர் நியமனத் திகதி முதல் 3 வருடங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடமை மேற்கொள்ளல் வேண்டும்.

1. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறைமை.-** (i) கால்நடை வைத்திய அதிகாரி பதவிகளில் நிலவும் வெற்றிடங்களின் பொருட்டு பேராதனை பல்கலைக்கழகத்தின் மிருக வைத்திய பீடத்தினால் வெளியிடப்படும் திறமை அட்டவணைக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும். அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து மிருக வைத்திய விஞ்ஞானத்துறையில் பட்டத் தகைமையைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர், இலங்கை மிருக வைத்தியர் சங்கத்தில் பதிவு செய்வதன் பொருட்டு தகைமையைப் பூரணப்படுத்துகின்ற ஆண்டிற்கு உரியவாறு பதிவுசெய்துள்ள திகதி ஒழுங்கிற்கு அமைய திறமை அட்டவணையின் இறுதியில் உட்படுத்தப்படுவர்.

(ii) திறமை அட்டவணை ஒழுங்கிற்கு அமைய ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிட எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு அவ்வெண் ணிக்கையைவிட 110% அளவான விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு உரிய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

(iii) நியமனம் செய்யப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் செயல்வலுப் பெறும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைய தீர்மானிக்கப்படும்.

2. **பணிக்கமர்த்துவதற்கான சேவை நியதிகளும் நிபந்தனைகளும்.-** (i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவை/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அவரால் விண்ணப்பிக்கப்படுகின்ற இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் அட்டவணைப்படுத்தப்பட்ட பதவி ஒன்றினை நிரப்பும் பொருட்டு நியமனம் செய்யப்படுவார்.

(iii) பொ. நி. சு. இலக்கம் 7/2007 (II) இற்கு அமைய மற்றைய மொழி தொடர்பான தேர்ச்சி மட்டத்தை 5 வருடங்களினுள் அடைந்து கொள்ளல் வேண்டும். அரச கரும மொழி அல்லாத மொழியில் சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் 03 (மூன்று) வருடங்களினுள் ஏதாவது அரச கரும மொழி ஒன்றில் தேர்ச்சி மட்டத்தை அடைதல் வேண்டும். மற்றைய அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சி மட்டத்தை 06 (ஆறு) வருடத்தினுள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். I ஆம் வகுதிக் குரியவர்கள் இரண்டாவது அரச கரும மொழி தொடர்பில் தேர்ச்சி மட்டத்தை அடைதல் வேண்டும்.

(iv) ஏனைய சேவை நியமனத்திற்கான நியதிகளும் நிபந்தனைகளும் 1980.10.31 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவைப் பிரமாணம் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக்கோவையின் ஒழுங்குவிதிகள் மற்றும் அவ்வப்போது அரசினால் வெளியிடப்படும் பொது நிர்வாக சுற்றறிக்கைகளுக்கு அமையவும், அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும், நிதிப்பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இப்பதவி உட்படுத்தப் படும்.

3. **சம்பளத் திட்டம்.-** இப்பதவி SL-I-2006 ரூபா 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555 மாதாந்த சம்பளத் திட்டத்திற்கு உரித்துடையது. (2006.04.25 ஆந் திகதிய பொ. நி. சு. இலக்கம் 6/2006 இன் SL-I-2006 சம்பள வகுதி.)

4. **கல்வித் தகைமைகள்.-** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட மிருக வைத்திய விஞ்ஞானத்துறையில் நான்கு வருடப் பட்டப்படிப்பு.

5. **வயது எல்லை.-** விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது 21 இற்கு குறையாமலும் 35 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

6. **உடற்தகைமை.-** (i) சகல விண்ணப்பதாரரும் தீவின் எப்பாகத் திலும் சேவையில் ஈடுபடக்கூடியவராக இருத்தல்.

(ii) பதவியில் கடமையை மேற்கொள்வதற்கு போதிய உடல் மற்றும் உளத் தகைமையைக் கொண்டவராக இருப்பதுடன், உடற்தகுதி வைத்திய சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

7. **ஏனைய தகைமைகள்.-** (i) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) சகல விண்ணப்பதாரரும் சிறந்த குணவியல்பு உள்ளவராக இருத்தல் வேண்டும்.

(iii) மிருக வைத்திய விஞ்ஞானப் பட்டம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 2010.12.31 ஆந் திகதியாகவோ அல்லது அதற்கு முன்னதாகவோ இருத்தல் வேண்டும். அத்துடன் இலங்கை கால்நடை மருத்துவர் சபையில் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) விண்ணப்ப முடிவுத் திகதி அன்று பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதன் பொருட்டு தேவையான சகல தகைமைகளையும் சகல விதத்திலும் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

8. **நேர்முகப் பரீட்சை :**

8.1 பொது நேர்முகப் பரீட்சை (புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது). எதிர்பார்க்கப்படும் இலக்கு.- ஆட்சேர்ப்புச் செய்யப்படும் ஒழுங்குவிதி மற்றும் அதற்கு இணையாக வெளியிடப்படுகின்ற அறிவித்தலில் குறிப்பிடப் படுகின்ற தகைமைகளை கொண்டிருக்கின்றாரா என்பதை பரீட்சித்துப் பார்ப்பதற்கும் மற்றும் உடற்தகைமையைப் பரீட்சித்துக்கொள்வதற்கும் ஆகும்.

9. **விண்ணப்பிக்கும் முறைமை.-** (i) விண்ணப்பம் 22 x 29 செ. மீ. அளவிலான ஏ4 கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்துக்கொள்ளல் வேண்டும்.

(ii) நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும்போது கீழே குறிப்பிடப் பட்டுள்ள ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;

(ஆ) பட்டம் மற்றும்/ அல்லது உயர் தகைமைகளைக் கொண்ட கல்விச் சான்றிதழ்கள் ;

(இ) அண்மையில் பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ் இரண்டு. அதில் ஒன்று வதிவுப் பகுதியின் கிராம அலுவலரிடமிருந்து பெற்று பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் ;

(ஈ) சிங்களம்/ தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சித்திபெற்ற உயர் பரீட்சைகளின் பெறுபேற்று சான்றிதழ்கள் ;

(உ) மிருக வைத்தியராக மிருக வைத்திய சபையில் பதிவுசெய்யப் பட்ட சான்றிதழ்.

10. **ஏனைய ஒழுங்குவிதிகள்**.- (i) இவ்வர்த்தமான அறிவித்தலில் ஒழுங்குவிதிகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்படாத விடயங்களில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு உரித்தாகும்.

(ii) வெற்றிடங்களினை நிரப்புதல், நிரப்பாமல் விடுதல் அல்லது ஒரு பகுதியினை மாத்திரம் நிரப்புதல் போன்ற விடயத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கே உரியதாகும்.

(iii) இவ்வர்த்தமான அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளின் மத்தியில் ஏதும் வேறுபாடு நிலவுமேயாயின் இங்கு சிங்கள மொழி மூலத்தினையே இறுதித் தீர்வாகக் கொள்ளல் வேண்டும்.

(iv) விண்ணப்பதாரர் ஒருவர் தகைமையற்றவர் எனத் தெரியவரின் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

(v) விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு தகவல் உண்மைக்குப் புறம்பாக சமர்ப்பிக்கப்பட்டிருப்பது தெரியவரின் அல்லது ஏதாவது முக்கிய தகவல் ஒன்றினை அவர் வேண்டுமென்றே மறைத்து இருப்பாரேயாயின் அவர் சேவையில் இருந்தும் நீக்கப்பட இடமுண்டு.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைய,

கே. எம். ரீ. கேந்தரகம,
செயலாளர்.

கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு,
2013.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு**

*இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் வகுப்பு II தரம் II இல் காணப்படும் கால்நடை வைத்திய அதிகாரி பதவி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்*

(அலுவலக பயன்பாட்டிற்காக)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :----.
ஆங்கிலத்தில் (தனிப் பேரெழுத்துக்களால்) :

(ii) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் ஆங்கிலத்தில் (தனிப் பேரெழுத்துக்களால்)

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

3. தபால் முகவரி :----.
(முகவரியில் ஏதும் மாற்றம் ஏற்பட்டால் உடன் அறிவிக்கவும்).

4. நிரந்தர வதிவிடத்துக்குரிய-

(i) மாகாண சபை :----.
(ii) மாவட்டம் :----.

5. பிறந்த திகதி :

ஆண்டு :   மாதம் :   திகதி :

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் :   மாதங்கள் :   நாட்கள் :

6. (அ) நீர் இலங்கைப் பிரசையா ? :----.
இனம் (சிங்களம்/இலங்கைத் தமிழ்/இந்தியத் தமிழ்/ முஸ்லிம்/ஏனைய) :----.

7. (அ) ஆண்/பெண் :----.
(ஆ) விவாகமானவர்/விவாகமாகாதவர்/விவாகரத்தானவர் : ----.

8. கல்வித் தகைமைகள் :

| பட்டம்/பட்டப்பின் படிப்பு தகைமை | வகுப்பு | பல்கலைக்கழகம் | வருடம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

9. இலங்கை மிருக வைத்திய சபையில் பதிவுசெய்த இலக்கமும் திகதியும் :----.

10. சேவை விபரம் (தற்போது நிரந்தரப் பதவி வகிப்பதாயின்) :

| தற்போதைய பதவி | சேவைக்காலம் முதல் வரை | சேவை நிலையம் | திணைக் களம்/ மாகாணம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

11. இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் உறுதியளிக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றது அல்லது பிழையானது என நான் தெரிவுசெய்யப் படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து நான் தகைமையற்றவ னாகுவதுடன், தெரிவுசெய்ததன் பின்னர் அவ்வாறு தெரியவருமிமிடத்து

எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். எந்தவொரு நீதிமன்றத்தினாலும் குற்ற வாளியாக்கப்படவில்லை என்பதை இத்தால் உறுதிமொழிகின்றேன்.

----,
விண்ணப்பதாரரது கையொப்பம்.

திகதி :----.

(தற்போது நிரந்தரப் பதவி ஒன்றிலுள்ள விண்ணப்பதாரருக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்.)

**திணைக்களத் தலைவரது சான்றிதழ் :**

மேற்குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரி திரு./ திருமதி/ செல்வி .................... இத்திணைக்களத்தில்/.......................................... மாகாண சபையில் ......................................... எனும் பதவியில் உள்ளவர் எனவும், விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் அவரது தனியார் கோவைக்கு அமைவாக உண்மையானது எனவும் உறுதிப்படுத்துகின்றேன். இப்பதவியின் நிமித்தம் இவ்வுத்தியோகத்தர் தெரிவுசெய்யப் படுமிடத்து அவரை இத்திணைக்களத்தில்/இம்மாகாண அரச சேவையில் இருந்து விடுவிப்பு செய்ய முடியும்/ முடியாது என்பதை அறியத்தருகின்றேன். (தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும்.)

----,
திணைக்களத் தலைவர்.
பதவி முத்திரை :

முகவரி :----.
திகதி :----.

12-1221

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம்

### தொழில் நுட்பவியல் கல்லூரிகளில் நடாத்தப்படும் தேசிய தொழில் தகைமை மட்டம் 5 டிப்ளோமா கற்கைநெறிகளுக்கு மாணவர்களை அனுமதித்தல் - 2014

இவ்வர்த்தமானி அறிவித்தலில் காணப்படும் தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் நடாத்தப்படும் கற்கை நெறிகள் தொடர்பாக தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்களுள் அவர்கள் தகைமைகளுக்கும் திறமைகளுக்கும் அமைய கற்கை நெறிகளுக்கு தேவையான எண்ணிக்கைகளுக்கு ஏற்ப மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

2. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை இவ்வறிவித்தலில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக 13"x8" அளவிலான தாளில் தயாரித்துக்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள். மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி 14 இல் கூறப்பட்டதற்கு இணங்க, ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திலும் ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்டு அதன் மேல் விண்ணப்பதாரர் தனது கையொப்பத்தை இடுவதன் மூலம் அதன் பெறுமதி நீக்கம் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 28.01.2014 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் உரிய தொழில்நுட்பவியல் கல்லூரிப் பணிப்பாளருக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

3. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியின் பெயர், அதன் குறியீட்டு இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

4. குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. பகுதி நேரம்/மாலைநேர கற்கைநெறிகளுக்கு ஒரு வருடத்திற்கு ரூபா 2,000 கட்டணமாக அறவிடப்படும்.

6. சகல கற்கைநெறிகளும் ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படும்.

7. ஒவ்வொரு விண்ணப்பதாரியின் கவனத்திற்காக இவ்வறிவித்தலின் இறுதியில் பயிற்சி தொடர்பான அட்டவணை ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. அவ் அட்டவணையானது பயிற்சிநெறியின் தன்மை, ஒவ்வொரு பயிற்சிநெறிக்கும் தேவைப்படும் தகைமைகள், பயிற்சிநெறிகள் நடாத்தப்படும் கல்லூரிகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. பயிற்சிநெறிகள் நடாத்தப்படவிருக்கும் தொழில்நுட்பவியல் கல்லூரிகளின் முகவரிகள், தொழில்நுட்பவியல் கல்லூரி பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ளன.

8. தொழில்நுட்பக் கல்லூரிகளில் கற்கை நெறிகளைத் தொடர்வதற்கு அனுமதிகோரும் விண்ணப்பதாரிகள்-

(1) நற்பண்புகள் உடையவராக இருத்தல் வேண்டும் ;
(2) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(3) விண்ணப்பம் சமர்ப்பிக்கும்போதே அனுமதி பெறுவதற்கு வேண்டிய தகைமைகள் அனைத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

9. தகுதியான பரீட்சார்த்திகள் ஒரு பொது உளச்சார்புப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகள் மூலமும் தெரிவு செய்யப்படுவர்.

10. ஏதாவது ஆவணங்களையோ அல்லது அவற்றினது பிரதிகளையோ விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கக்கூடாது. தமது தகைமையை நிரூபிப்பதற்கு தேவையானதும் ஏற்கக்கூடியதுமான ஆவணங்களை நேர்முகப் பரீட்சையின்போது வழங்கத் தவறும் விண்ணப்பதாரிகள் தகைமையற்றவர்களாகக் கருதப்படுவர்.

11. * முழு நேரக் கற்கை நெறிகளைத் தொடரும் மாணவர்களுக்கு தமது குடும்ப வருமான நிலைமைகளுக்கேற்ப கல்லூரி வகுப்புக்களுக்குச் சமுகமளிக்கும் நாளொன்றுக்கு ரூபா 50 வீதம் மாணவர் உதவிக் கொடுப்பனவாக மாதம் ஒன்றிற்கு ரூபா 1,000 இற்கு மேற்படாது வழங்கப்படும்.

* குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தைச் சேர்ந்த, முழுநேரக் கற்கைநெறி மாணவர்கள் வருடமொன்றிற்கு ரூபா 2,500 வீதம் மாணவர் உதவுத்தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

12. சகல ஆவணங்களின் நம்பகத்தன்மைக்கும் விண்ணப்பதாரியே முழுப்பொறுப்புடையவராவார். மாற்றம் செய்யப்பட்ட அல்லது பொய்யான அல்லது உண்மையை உறுதிசெய்யத் தவறும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் கடுமையான தண்டனைக்கு ஆளாக்கப்படுவர்.

13. இவ்வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் 2014 ஆம் கல்வி ஆண்டிற்குரிய எல்லா பாடநெறிகளையோ அல்லது குறிப்பிட்ட பாடநெறிகளையோ நடாத்தும் முடிவினை தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமே மேற்கொள்வார்.

விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு பயிற்சிநெறிக்கும் தனித்தனியான விண்ணப்பப்படிவங்களைப் பயன்படுத்தி ஒன்றுக்கு மேற்பட்ட பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

**குறிப்பு**.- கணிய அளவையியல் தொழில்நுட்பவியல் பகுதி நேரம் மற்றும் பகல் நேர கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிப்பவர்களுக்காக :-

* களுத்துறை மற்றும் கம்பஹா தொழில்நுட்பக் கல்லூரி விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை மருதானை தொழில்நுட்பவியல் கல்லூரிக்கு அனுப்புதல் வேண்டும்.

* பலப்பிட்டிய, மாத்தறை மற்றும் பெலியத்த தொழில்நுட்பக் கல்லூரி விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை காலி தொழில்நுட்பவியல் கல்லூரிக்கு அனுப்புதல் வேண்டும்.

* பண்டாரவளை தொழில்நுட்பக் கல்லூரி விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை பதுளை தொழில்நுட்பவியல் கல்லூரிக்கு அனுப்புதல் வேண்டும்.

* கேகாலை, வறக்காப்பொலை தொழில்நுட்பக் கல்லூரி விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை இரத்தினபுரி தொழில்நுட்பவியல் கல்லூரிக்கு அனுப்புதல் வேண்டும். மேலும் விண்ணபதாரிகள் விண்ணப்பப்படிவத்தின் இல. 1 இல் தொழில்நுட்பவியல் கல்லூரியின் பெயரைக் குறிப்பிடுவதுடன் அதனைத் தொடர்ந்து தொழில்நுட்பக் கல்லூரியின் பெயரையும் அடைப்புகளில் கட்டாயமாக பின்வருமாறு குறிப்பிடுதல் வேண்டும்.

**உதாரணம்**.- தொழில்நுட்பவியல் கல்லூரி, இரத்தினபுரி (தொழில்நுட்பக் கல்லூரி கேகாலை).

எஸ். பாலசுப்பிரமணியம்,
பணிப்பாளர் நாயகம்,
தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம்.

த. பெ. இல. 557,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.
www.dtet.gov.lk.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சு**

*தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் தேசிய தொழில்நுட்ப தகைமை மட்டம் 5 டிப்ளோமா கற்கைநெறிகளுக்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் - கல்வியாண்டு 2014*

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. விண்ணப்பிக்கும் தொழில்நுட்பவியல் கல்லூரியின் பெயர் :----.
2. விண்ணப்பிக்கும் கற்கைநெறியின் பெயர் :----.
   (முழு நேரம் பகல்/மாலை/பகுதி நேரம்)
3. கற்கைநெறியின் குறியீட்டு இல. :---.
4. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர் :----.
5. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :----.
6. நிரந்தர முகவரி :----.
7. தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் :----. மின்-அஞ்சல் :----.
8. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
9. மாவட்டம் :----. தேர்தல் தொகுதி :----.
   பிரதேச செயலாளர் பிரிவு :----.
   கிராம அலுவலர் பிரிவு :----.
10. பிறந்த திகதி :----.
    2014.01.01 ஆந் திகதியன்று வயது :-
    வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
11. பால் (ஆண்/பெண்) :----.
12. அனுமதிக்கான தகைமைகள் (வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய உமது தகைமைகளை உரிய கூட்டினுள் காட்டுக) :-

| கற்கைநெறிக்கு அனுமதிக்கான தகைமை/சான்றிதழ்களின் விபரங்கள் | | | | |
|---|---|---|---|---|
| பெறப்பட்ட சான்றிதழின் பெயர் | தேசிய தொழில்நுட்ப தகைமை மட்டம் | கற்கைநெறியை பின்பற்றிய நிறுவனத்தின் பெயர் | அனுபவத்தின் விபரம் | சேவை வருடம் மாதம் |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

13. கல்வித் தகைமைகள் :

(அ) க.பொ. த. (சா/த) பெறுபேறுகள் (இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல்):-

| சுட்டிலக்கம் | வருடம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| | | | |

(ஆ) க. பொ. த. (உ/த) பெறுபேறுகள் :-

| சுட்டிலக்கம் | வருடம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| | | | |

14. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**
இப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கு உட்பட்ட வரையில் உண்மையானவை என்றும் விண்ணப்பித்துள்ள பயிற்சிநெறிக்கு வேண்டிய தகைமைகள் எனக்கு உண்டு என்றும் இத்தால் உறுதிமொழிகின்றேன். மேலும் தொழில்நுட்பக் கல்லூரிக்கு மாணவர்களைத் தெரிவுசெய்யும் திட்டத்திற்கு இணங்குவேன் என்றும் தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினது முடிவே இறுதியானது எனவும் ஏற்றுக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10 ரூபா பெறுமதியான முத்திரையை ஒட்டி அதன்மேல் கையொப்பமிட்டு அதனை பெறுமதி நீக்கம் செய்யவும்.

**தொழில்நுட்பவியல் கல்லூரிகளின் பெயர்ப்பட்டியல்**

| தொடர் இல. | தொழில்நுட்பவியல் கல்லூரிகள் | விலாசம் | மாவட்டம் | தொலைபேசி | மின்னஞ்சல் |
|---|---|---|---|---|---|
| 1. | இலங்கை தொழில் நுட்பவியல் கல்லூரி, மருதானை | ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10. | கொழும்பு | 011-2324177 | tecmaradana@gmail.com |
| 2. | காலி தொழில் நுட்பவியல் கல்லூரி | களுவெல்ல, காலி | காலி | 091-2234051 | cotgalle2007@gmail.com |
| 3. | கண்டி தொழில் நுட்பவியல் கல்லூரி | அறுப்பொல, கண்டி | கண்டி | 081-2224063 | kandycot@gmail.com |
| 4. | யாழ்ப்பாணம் தொழில் நுட்பவியல் கல்லூரி | பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | 021-2222358 | cotjaffna@gmail.com |
| 5. | பதுளை தொழில் நுட்பவியல் கல்லூரி | கிறீன்லேண்ட் டிரைவ், பதுளை | பதுளை | 055-2222413 | cotbadulla@gmail.com |
| 6. | அநுராதபுரம் தொழில் நுட்பவியல் கல்லூரி | புதிய நகரம், அநுராதபுரம் | அநுராதபுரம் | 025-2222666 | cotanuradhapura@gmail.com |
| 7. | குருநாகல் தொழில் நுட்பவியல் கல்லூரி | புத்தளம் வீதி, குருநாகல் | குருநாகல் | 037-2223264 | cotkurunegala@gmail.com |
| 8. | அம்பாறை ஹாடி தொழில்நுட்பவியல் கல்லூரி | இங்கினியாகல வீதி, அம்பாறை | அம்பாறை | 063-2223485 | cotampara@gmail.com |
| 9. | இரத்தினபுரி தொழில் நுட்பவியல் கல்லூரி | பாம் தோட்டம், கொழும்பு வீதி, இரத்தினபுரி | இரத்தினபுரி | 045-2232390 | cotrathnapura@gmail.com |

**தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் நடாத்தப்படும் தேசிய தொழிநுட்பவியல் தகைமை மட்டம் 5 டிப்ளோமா கற்கைநெறிகளுக்கு மாணவர்கள் அனுமதி**

| தொடர் இல. | கற்கை நெறி இல. | கற்கைநெறியின் பெயரும் தன்மையும் | நடாத்தப்படும் தொழில்நுட்பவியல் கல்லூரி | அனுமதிக்கான தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | * கீழே காட்டப்பட்டுள்ள சான்றிதழ் கற்கைநெறிகளுக்கு தேசிய தொழில் தகைமை மட்டம் 3/4 பெற்றிருக்க வேண்டும்.<br><br>* வயது 17 வருடங்களுக்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும் |
| 1 | ETB-01 | தொலைத்தொடர்பு தொழில் நுட்பவியல்<br><br>முழுநேரம்-பகல் இரண்டு வருடங்கள் இணைவு (NVQ 5/6) | காலி, யாழ்ப்பாணம் | * கணினி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர்<br>* கணினி வலைப்பின்னல் தொழில்நுட்பவியலாளர்<br>* வானொலி, தொலைக்காட்சி மற்றும் இணைந்த கருவிகள் திருத்துனர் |
| 2 | ETB-04 | இயந்திர மின் இலத்திரனியல் தொழில்நுட்பவியல் (மெக்காறோனிக்ஸ்)<br><br>முழுநேரம்-பகல் ஒரு வருடம் | மருதானை, காலி | * வானொலி, தொலைக்காட்சி மற்றும் இணைந்த கருவிகள் திருத்துனர்<br>* கணினி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர்<br>* பெனுமற்றிக் தொழில்நுட்பவியலாளர்<br>* தன்னியக்க மோட்டார் வாகன தொழில்நுட்பவியலாளர்<br>* தன்னியக்க மோட்டார் வாகன மின்னியலாளர்<br>* வீட்டு மின்சார பாவனை உபகரணங்கள் திருத்துனர்<br>* மின்னியலாளர் (பொது)<br>* பொருத்துனர் (பொது) |
| | ETB-04.1 | இயந்திர மின் இலத்திரனியல் தொழில்நுட்பவியல்<br><br>வார இறுதி/பகுதிநேரம் (NVQ மட்டம் 5 இற்காக ஒதுக்கப்பட்ட மணித்தியாலங்களின் எண்ணிக்கை) | மருதானை, காலி | |
| 3 | ETB-06 | நிர்மாண தொழில்நுட்பவியல்<br><br>முழுநேரம்-பகல் கற்கை ஒரு வருடம் | பதுளை குருணாகல், அனுராதபுரம், இரத்தினபுரி, கண்டி | * நிர்மாணம் கைவினைஞர் (மேசன்)<br>* மரவேலை கைவினைஞர் (கட்டிடம்)<br>* குழாய் பொருத்துனர்<br>* கைத்தொழில் குழாய் பொருத்துனர்<br>* வர்ணம் தீட்டுனர் (கட்டடம்)<br>* பட வரைஞர் |
| | ETB-06.1 | நிர்மாண தொழில்நுட்பவியல்<br><br>வார இறுதி/பகுதி நேரம் (தேசிய தொழில் தகைமை மட்டம் 5 இற்காக ஒதுக்கப் பட்ட மணித்தியாலங்களின் எண்ணிக்கை) | காலி, அம்பாறை, யாழ்ப்பாணம், இரத்தினபுரி, குருணாகல் | * உதவி கனிய அளவீட்டு தொழில்நுட்பவியலாளர்<br>* கட்டிட வேலைத்தள மேற்பார்வையாளர் |

| தொடர் இல. | கற்கை நெறி இல. | கற்கைநெறியின் பெயரும் தன்மையும் | நடாத்தப்படும் தொழில்நுட்பவியல் கல்லூரி | அனுமதிக்கான தகைமைகள் |
|---|---|---|---|---|
| 4 | ETB-07 | ஓட்டோமொபைல் (தன்னியக்க மோட்டார் வாகன) தொழில்நுட்ப வியல்<br><br>முழுநேரம்-பகல் ஒரு வருடம் | அம்பாறை, யாழ்ப்பாணம், குருணாகல், கண்டி, பதுளை | * தன்னியக்க மோட்டார் வாகன இயந்திர திருத்துனர்<br>* தன்னியக்க மோட்டார் வாகன மின்னியலாளர்<br>* தன்னியக்க மோட்டார் வாகன வர்ணம் இடுபவர்<br>* மோட்டார் சைக்கிள் இயந்திர திருத்துனரும் முச்சக்கர வண்டி இயந்திர திருத்துனரும்<br>* முச்சக்கர வண்டி இயந்திர திருத்துனர் |
| | ETB-07.1 | ஓட்டோமொபைல் (தன்னியக்க மோட்டார் வாகன) தொழில்நுட்ப வியல்<br><br>வார இறுதி/பகுதி நேரம் (NVQ மட்டம் 5 இற்காக ஒதுக்கப்பட்ட மணித்தியா லங்களின் எண்ணிக்கை) | கண்டி குருநாகல் யாழ்ப்பாணம் | |
| 5 | ETB-08 | குளிரூட்டல் மற்றும் வளிச் சீராக்கல் தொழில்நுட்பவியல்<br><br>முழுநேரம்-பகல் ஒரு வருடம் | அனுராதபுரம் இரத்தினபுரி கண்டி | * குளிரூட்டல் மற்றும் வளிச்சீராக்க இயந்திர திருத்துனர்<br>* தன்னியக்க மோட்டார் வாகன வளிச்சீராக்கல் திருத்துனர்<br>* தன்னியக்க மோட்டார் வாகன மின்னியலாளர்<br>* வீட்டு மின்சார பாவனை உபகரணங்கள் திருத்துனர்<br>* மின்னியலாளர் |
| | ETB-08.1 | குளிரூட்டல், வளிச் சீராக்கல் தொழில்நுட்பவியல்<br><br>வார இறுதி/பகுதி நேரம் (NVQ மட்டம் 5 இற்காக ஒதுக்கப்பட்ட மணித்தியா லங்களின் எண்ணிக்கை) | அனுராதபுரம் இரத்தினபுரி | |
| 6 | ETB-09 | தோட்ட இயந்திர தொழில் நுட்பவியல்<br><br>முழுநேரம்-பகல் ஒரு வருடம் | அனுராதபுரம் | * தேயிலை தொழிற்சாலை இயந்திர திருத்துனர்<br>* விவசாய உபகரணங்கள் இயந்திர திருத்துனர்<br>* தன்னியக்க மோட்டார் வாகன இயந்திர திருத்துனர்<br>* இயந்திர இயக்குனர்<br>* நிர்மாண உபகரண திருத்துனர் |
| | ETB-09.1 | தோட்ட இயந்திர தொழில் நுட்பவியல்<br><br>வார இறுதி/பகுதி நேரம் (NVQ மட்டம் 5 இற்காக ஒதுக்கப்பட்ட மணித்தியா லங்களின் எண்ணிக்கை) | அனுராதபுரம் | |

| தொடர் இல. | கற்கை நெறி இல. | கற்கைநெறியின் பெயரும் தன்மையும் | நடாத்தப்படும் தொழில்நுட்பவியல் கல்லூரி | அனுமதிக்கான தகைமைகள் |
|---|---|---|---|---|
| 7 | ETB-11 | தகவல் தொலைத்தொடர்பு தொழில்நுட்பவியல்<br>முழுநேரம்-பகல் ஒரு வருடம் | மருதானை<br>கண்டி<br>காலி<br>பதுளை<br>இரத்தினபுரி<br>யாழ்ப்பாணம்<br>குருணாகல்<br>அம்பாறை<br>கேகாலை | * தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர்<br>* கணனி பிரயோக உதவியாளர்<br>* கணனி கிரபிக்ஸ் வடிவமைப்பாளர்<br>* கணனி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர்<br>* டெஸ்க்டொப் வெளியீட்டாளர்<br>* கணனி வலைப்பின்னல் தொழில்நுட்பவியலாளர் |
| | ETB-11.1 | தகவல் தொலைத்தொடர்பு தொழில்நுட்பவியல்<br>வார இறுதி/பகுதி நேரம் (NVQ மட்டம் 5 இற்காக ஒதுக்கப்பட்ட மணித்தியா லங்களின் எண்ணிக்கை) | காலி<br>இரத்தினபுரி<br>மருதானை,<br>அனுராதபுரம்<br>யாழ்ப்பாணம் | |
| 8 | ETB-12 | வெல்டிங் (மின்னால் காய்ச்சி ஒட்டுதல்) தொழில்நுட்பவியல்<br>முழுநேரம்-பகல் ஒரு வருடம் | மருதானை | * வெல்டர் (மின்னால் காய்ச்சி ஒட்டுதல்)<br>* உலோக உருவமைப்பாளர்<br>* தன்னியக்க மோட்டார் வாகன தகர வேலையாளர் (ரிங்கர்)<br>* பொருத்துனர் (பொது) |
| | ETB-12.1 | வெல்டிங் (மின்னால் காய்ச்சி ஒட்டுதல்) தொழில்நுட்பவியல்<br>வார இறுதி/பகுதி நேரம் (NVQ மட்டம் 5 இற்காக ஒதுக்கப்பட்ட மணித்தியா லங்களின் எண்ணிக்கை) | மருதானை | |
| 9 | ETB-14 | உணவு தொழில்நுட்பவியல்<br>முழுநேரம்-பகல் ஒரு வருடம் | கண்டி | * வெதுப்புனர் (பேக்கர்)<br>* பழங்கள் மற்றும் மரக்கறிகள் செய்முறையாளர்<br>* சமையலாளர் |
| | ETB-14.1 | உணவு தொழில்நுட்பவியல்<br>வார இறுதி/ பகுதி நேரம்<br>(NVQ மட்டம் 5 இற்காக ஒதுக்கப்பட்ட மணித்தியா லங்களின் எண்ணிக்கை) | கண்டி | |
| 10 | ETB-15 | ஆபரண உற்பத்தி வடிவ மைப்பு தொழில்நுட்பவியல்<br>முழுநேரம்-பகல் ஒரு வருடம் | மருதானை | * ஆபரணம் புனைபவர்<br>* ஆபரண கல் வெட்டுனர் |
| | ETB-15.1 | ஆபரண உற்பத்தி வடிவ மைப்பு தொழில்நுட்பவியல்<br>(NVQ மட்டம் 5 இற்காக ஒதுக்கப்பட்ட மணித்தியா லங்களின் எண்ணிக்கை) | மருதானை | |

| தொடர் இல. | கற்கை நெறி இல. | கற்கைநெறியில் பெயரும் தன்மையும் | நடாத்தப்படும் தொழிநுட்பவியல் கல்லூரி | அனுமதிக்கான தகைமைகள் |
|---|---|---|---|---|
| 11 | ETB-16 | உற்பத்தி தொழில்நுட்பவியல்<br><br>முழுநேரம்-பகல் ஒரு வருடம் | கண்டி | * அலுமினிய உருவமைப்பாளர்<br>* இயந்திர இயக்குனர்<br>* கருவி டை, அச்சு செய்யுனர்<br>* வெல்டர் (மின்னினால் காய்ச்சி ஒட்டுதல்)<br>* உலோக உருவமைப்பாளர்<br>* பொருத்துனர் (பொது) |
| 12 | ETB-17 | கனிய அளவையியல் தொழில் நுட்பவியல்<br><br>முழுநேரம்-பகல் ஒரு வருடம் (NVQ மட்டம் 5 சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னதாக NVQ மட்டம் 4 இலுள்ள மொடியுள்களும் ஒப்படைகளிலும் கட்டாயம் சித்தியடைந்திருக்க வேண்டும். | கண்டி<br>இரத்தினபுரி<br>வறக்காப்பொல,<br>காலி, கேகாலை<br>மருதானை<br>பதுளை<br>பண்டாரவளை<br>அனுராதபுரம்<br>அம்பாறை<br>யாழ்ப்பாணம்<br>கம்பஹா<br>மாத்தறை<br>குருணாகல்<br>பலபிட்டிய<br>பெலியத்தை<br>களுத்துறை | * க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் ஒரே தடவையில் விஞ்ஞானம், கணிதம் மற்றும் மொழி உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி<br>* ஆகக் குறைந்தது ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தியாவது கட்டாயம் பெற்றிருத்தல் வேண்டும்.<br>* பிரயோக கணிதம் அல்லது தூய கணிதம் அல்லது இணைந்த கணிதம் அல்லது க. பொ. த. உயர் தரத்தில் வன்தொழில்நுட்பத்தை ஒரு பாடமாக பயின்ற விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| 12 | ETB-17.1 | கனிய அளவையியல் தொழில் நுட்பவியல்<br><br>வார இறுதி/ பகுதி நேரம் (NVQ மட்டம் 5 சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னதாக NVQ மட்டம் 4 இலுள்ள மொடியுள்களும் ஒப்படைகளிலும் கட்டாயம் சித்தியடைந்திருக்க வேண்டும். | கண்டி<br>இரத்தினபுரி<br>மருதானை<br>அனுராதபுரம்<br>யாழ்ப்பாணம்<br>குருணாகல்<br>மாத்தறை | |

12-1246

---

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

வெளிவிவகார அமைச்சு

இலங்கை வெளிநாட்டுச் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013 (2014)

இந்த அறிவித்தலின் 2 ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் தகுதியுடைய பரீட்சார்த்திகளிடமிருந்து இலங்கை வெளிநாட்டுச் சேவையின் (இதனகத்துப் பின்னர் ''சேவை'' எனக் குறிப்பிடப்படும்) III ஆம் தரத்திலுள்ள 25 வெற்றிடங்களை நிரப்புவதற்காக இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. ஆட்சேர்ப்பு முறை.- இந்த அறிவித்தலின் நியதிகளின் பிரகாரம் தகைமையுடைய பரீட்சார்த்திகள் எழுத்துமூலப் பரீட்சைக்கும் கட்டமைப்புச் செய்யப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கும் தோற்றுமாறு வேண்டப்படுகின்றனர் என்பதுடன், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் ஒன்றாக எடுத்துக்கொள்ளப்படும் எழுத்துமூலப் பரீட்சையிலும்

நேர்முகப் பரீட்சையிலும் மொத்தமாகப் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் நியமனத்திற்கு தெரிவுசெய்யப்படுவர்.

2. தகைமை :

(i) கல்வி/தொழில்சார் தகைமைகள் :

* இலங்கையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட ஓர் பட்டம்

அல்லது

* இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக் கழகமொன்றின் பட்டமொன்று
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் இது தொடர்பில் வழங்கப்பட்ட ஆவணச் சான்று நேர்முகப் பரீட்சையின்போது பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ii) சுகாதாரம்.- உலகத்தின் எந்தப் பகுதியிலும் சேவையாற்று வதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்குமாக சகல பரீட்சார்த்திகளும் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் தகுதியுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(iii) ஏனையவை :

(அ) இலங்கையின் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ஆ) சிறந்த ஒழுக்கப் பண்பு உடையவராக இருத்தல் வேண்டும் ;
(இ) விண்ணப்பங்களின் முடிவுத் திகதியளவில் இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான சகல தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **இச்சேவையின் நியதிகளும் நிபந்தனைகளும் :**

(i) இச்சேவைக்கு தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் 2001 ஆம் ஆண்டின் இலங்கை வெளிநாட்டுச் சேவைப் பிரமாணக் குறிப்புகளில் விதித்துரைக்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அவற்றிற்கான திருத்தங்களுக்கும் அரசாங்க சேவையிலுள்ள நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கும் உட்படுத்தப்படுவர்.

(ii) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும் என்பதுடன் விதவைகள் அனாதைகள்/தபுதாரர்கள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(iii) இந்நியமனமானது 3 ஆண்டு தகுதிகூர் நிலைக் காலத்தைக் கொண்டதாகும். இலங்கை வெளிநாட்டுச் சேவையின் III ஆம் தரத்திலுள்ள 3 ஆண்டுக் காலப்பகுதிக்குள் உத்தியோகத்தர் இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் நியதிகளின் பிரகாரம் I ஆவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தி யடையுமாறு வேண்டப்படுவர்.

(iv) 07/2007 ஆம் இலக்கத்தைக் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையினதும் அதன் திருத்தங்களினதும் நியதிகளின் பிரகாரம் அரசாங்க சேவைக்கு ஆட்சேர்க்கப்படும் உத்தியோ கத்தர்கள் இச்சேவையின் 5 ஆண்டுகாலப் பகுதிக்குள் மற்றைய உத்தியோகபூர்வ மொழியில் தேர்ச்சி அடைந் திருத்தல் வேண்டும். உத்தியோகபூர்வ மொழிகள் தவிர்ந்த பிறிதொரு மொழி மூலம் சேவைக்கு ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்கள் தகுதிகூர் நிலை காலப்பகுதியில் உத்தியோகபூர்வ மொழித் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யுமாறு வேண்டப்படுவர்.

(v) இந்த நியமனம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும் அரசாங்க நிதி ஒழுங்குவிதிகளுக்கும் ஏனைய திணைக்களக் கட்டளை களுக்கும் உட்பட்டதாகும்.

4. **வயதெல்லை**.- விண்ணப்ப முடிவுத் திகதியன்று 22 வயதைப் பூர்த்திசெய்தவராகவும் 32 வயதை அடையாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள பரீட்சார்த்தி ஒருவரின் விடயத்தில் அந்த பரீட்சார்த்தி விண்ணப்பம் முடிவடைதல் திகதியன்று 40 வயதை அடையாதவராகவும் திருப்திகரமான சேவைப் பதிவொன்றை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- (i) முற்போந்த 4 ஆம் வாசகத்தின் நோக்கத்திற்காக அரசாங்க சேவையிலுள்ள பரீட்சார்த்தியொருவர் என்பது (தாபன விதிக்கோவையின் I ஆம் அத்தியாயத்தில் வரைவிலக்கணப் படுத்தப்பட்டுள்ளதன்படி) விண்ணப்ப முடிவுத் திகதியளவில் அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உறுதிப் படுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரென பொருள் கோரப்படும்.

(ii) அரசாங்க சேவையிலுள்ள பரீட்சார்த்தியொருவர் விண்ணப்பம் முடிவடைதல் திகதிக்கு உடனடியாக முன்னதாகவுள்ள 5 ஆண்டுகளில் அல்லது சேவைக்காலப் பகுதியானது அரசாங்க சேவையிலுள்ள மொத்த சேவைக் காலத்தில் 5 ஆண்டுகளுக்கும் குறைவானதாக இருக்குமிடத்து அவர் திருப்திகரமான சேவைக்காலப் பகுதியை உடையவராக இருந்தாலன்றி அவர் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியுடையவராக மாட்டார்.

(iii) அரசாங்க சேவையிலுள்ள உறுப்பினரொருவர் உரிய திகதிக்கு முன்னர் விண்ணப்பம் முடிவடைதல் திகதிக்கு உடனடியாக முன்னதாகவுள்ள 5 ஆண்டுகளுக்குள் அல்லது உரிய நிறுவனத்தில் அவருடைய மொத்தச் சேவைக் காலப்பகுதியானது 5 ஆண்டுகளுக்கும் குறைவானதாக இருக்குமிடத்து அக்காலப்பகுதிக்குள் உரிய சகல சம்பள ஏற்றங்களையும் சம்பாதித்து இருப்பதுடன் மேலே குறிப்பிடப்பட்டுள்ள சேவைக் காலப்பகுதியில் புரிந்த எந்த தவறுகளின் தொடர்பிலும் (எச்சரிக்கை ஒன்று தவிர்ந்த) எந்த தண்டனையையும் அனுபவியாத வராக இருத்தல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை அந்தந்த திணைக்களத்தின்/நிறுவனத்தின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்**.- இச்சேவைக்கு ஏற்புடைத்தான சம்பளக் குறியீடு 6/2006 ஆம் இலக்கத்தைக் கொண்ட அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் SL-I-2006.

ரூபா 22,935-10 X 645-8 X 790-17 X 1,050-ரூபா 53,555 (மாதாந்த) ஆகும்.

6. **எழுத்துமூலப் பரீட்சை :**

(i) இப்பரீட்சை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சார்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் 2014 ஆம் ஆண்டு

ஏப்பிறல் மாதத்தில் கொழும்பில் நடாத்தப்படும். பரீட்சையின் நடாத்துகை, பெறுபேறுகளின் வெளியீடு ஆகியவற்றில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதியான தாகவிருக்கும்.

(ii) இப்பரீட்சை சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் மட்டுமே நடாத்தப்படும்.

(iii) மேலே குறிப்பிடப்பட்ட மூன்று மொழிகளில் ஒன்றில் பரீட்சார்த்தியொருவர் விண்ணப்பம் செய்யலாம் என்பதுடன் விண்ணப்பித்த மொழி மூலத்தில் சகல வினாத்தாள்களுக்கும் அவர் தோற்றுதல் வேண்டும். விண்ணப்பதாரர் தாம் விண்ணப்பித்த மொழி மூலத்தை மாற்ற முடியாது.

(iv) எழுத்துமூலப் பரீட்சையானது பின்வரும் பாடங்களில் வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் :-

| பாட இலக்கம் | பாடங்கள் | காலப்பகுதி | புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | பொது வினாத்தாள் | 3 மணித்தியாலங்கள் | 100 |
| 2 | உலக விவகாரங்கள் I | 3 மணித்தியாலங்கள் | 100 |
| 3 | உலக விவகாரங்கள் II | 3 மணித்தியாலங்கள் | 100 |
| 4 | கட்டுரை | 3 மணித்தியாலங்கள் | 100 |
| 5 | சுருக்கி எழுதுதல் | 1 மணித்தியாலம் | 100 |
| 6 | உளச் சார்புப் பரீட்சையும் பொது அறிவும் (பல் விருப்பத் தேர்வு வினாக்கள்) | 1 மணித்தியாலம் 40 நிமிடங்கள் | 100 |

*எழுத்துமூலப் பரீட்சைக்கான பாடத்திட்டம்.- (1) பொது வினாத்தாள்.-* இவ்வினாத்தாள் இலங்கையின் தற்போதைய தேசிய மற்றும் சர்வதேச அரசியல், சமூக, கலாசார, பொருளாதார சூழல் நடப்பு தேசிய மற்றும் சர்வதேச விவகாரங்கள் பற்றிய விடயங்கள், விஞ்ஞான, தொழில்நுட்ப அபிவிருத்திகள் என்பன தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவைப் பரீட்சிப்பதாகும்.

*(2) உலக விவகாரங்கள் I.-* இவ்வினாத்தாள் சமாதானம், பாதுகாப்பு, அபிவிருத்தி ஆகியவற்றிற்கான உலகப் போக்குகளையும் இலங்கை மீது அவற்றின் தாக்கத்தையும் பரிசீலனை செய்வதற்கும் தற்போதைய உலக அரசியல் மாற்றங்கள், ஐக்கிய நாடுகள் சபையினதும் ஏனைய சர்வதேச அமைப்புக்களினதும் போக்குகள் மற்றும் பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச அமைப்புக்களின் மோதல் நிலைமைகளையும் அபிவிருத்தியையும் பற்றிய விடயங்களையும் ஆய்ந்தறிவதற்கான பரீட்சார்த்தியின் திறமையையும் பரிசீலனை செய்வதாகவிருக்கும்.

*(3) உலக விவகாரங்கள் II.-* இந்த வினாத்தாள் சர்வதேச அமைப்புக்களினால் வகிக்கப்படும் பாகத்தையும் உள்ளடக்கி வியாபாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் சமீபத்திய போக்குகள் மற்றும் சுற்றாடல், நிலைபெறத்தக்க அபிவிருத்தி மற்றும் இலங்கைக்கான அவற்றின் இயைபாக்கம் போன்ற விடயங்கள் மற்றும் பிராந்திய ரீதியான பொரளாதார தொகுத்தல்களின் தாக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கும்.

*(4) கட்டுரை.-* குறித்துரைக்கப்பட்ட ஓர் விடயம் பற்றி அல்லது பல விடயங்கள் பற்றிய கட்டுரை ஒன்று எழுதப்பட வேண்டும். இவ்விடயங்கள் கற்கைத் துறையின் எந்த விடயமும் தொடர்பிலானதாகவும் இருக்க மாட்டா. இது வேட்பாளரின் சிந்தனையினதும் கருத்தை வெளிப் படுத்துவதில் அவருடைய ஆற்றல்களையும் பரீட்சிப்பதற்கான விதத்தில் வடிவமைக்கப்படும். கட்டுரையானது விடயத்தை கையாள்வதில் மேற்கொள்ளப்படும் சிந்தனை, சுய ஆக்கம் ஆகியவற்றினால் கணிக்கப் படும். அது தெளிவாகவும் வாசிக்கத்தக்கதாகவும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.-** பரீட்சார்த்திகளின் கவனம் இயைபினதும் தெளிவாக வாசிக்கப்படுவதினதும் முக்கியத்துவத்திற்கு ஈர்க்கப்படுகின்றது. பரிசீலித்து சிந்திக்கும் அளவிற்கும் எழுத்தின் தரத்திற்கும் தெளிவாகவும் சுருக்கமாகவும் ஒருவர் தம்மைப் பற்றி தெரிவிப்பதற்கான திறமை ஆகியவற்றின் அளவிற்கு பாடத்தின் கவனமான பரிசீலனைக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.

*(5) சுருக்கியெழுதுதல்.-* கொடுக்கப்பட்ட பந்தியொன்றின் கருத்தை விளங்கிக் கொள்வதற்கான பரீட்சார்த்தியின் திறனை பரிசீலனை செய்வதாக இவ்வினாத்தாள் வடிவமைக்கப்படும்.

*(6) உளச்சார்பு சோதனையும் பொது அறிவும்.-* இவ்வினாத்தாள் பின்வரும் பிரிவுகளைக் கொண்ட இரண்டு பாகங்களைக் கொண்டிருக்கும். இப்பிரிவு ஒவ்வொன்றும் பல்பக்க விருப்புரிமை வினாக்களைக் கொண்டிருக்கும். இரு பிரிவுகளுக்கும் தலா 50 புள்ளிகள் வழங்கப் படும் :-

(அ) உளச்சார்புச் சோதனை.- தர்க்கவியல் ரீதியாகக் காரணங் களையும் வேட்பாளரின் பரிசீலனை செய்யும் திறனையும் மதிப்பிடுதல் ;

(ஆ) பொது அறிவும் தற்போதைய விவகாரங்களும்.- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசியல், பொருளாதார சமூக கலாசார துறைகளில் நிலவுகின்ற தற்கால மாற்றங்கள் பற்றிய பரீட்சார்த்தியின் அறிவைப் பரிசோதித்தல்.

**7. நேர்முகப் பரீட்சை.-** (i) வினாத்தாள் ஒவ்வொன்றிலும் 40% என்ற ஆகக்குறைந்த புள்ளிகளைப் பெற்றிருப்பதுடன் 300 புள்ளிகளுக்கும் குறையாதவைகளும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் வெட்டுப் புள்ளியில் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளியில் மொத்தப் புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகள் மட்டுமே நேர்கமுகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எப்படியிருந்த போதிலும் அழைக்கப்படவுள்ள பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை வெற்றிடங்களின் ஐந்து மடங்கு எண்ணிக்கையை விஞ்ச மாட்டாது.

(ii) நேர்முகப் பரீட்சை 100 புள்ளிகளைக் கொண்டிருக்கும். எச்சந்தர்ப்பத்திலும் ஆகக்குறைந்த வெட்டுப்புள்ளிகள் குறைக்கப்பட மாட்டா.

(iii) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையினால் பொது அக்கறைக்குரிய விடயங்கள் மீது பரீட்சார்த்திகளுக்கு நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். இந்த நேர்முகப் பரீட்சையின் குறிக்கோள் என்னவெனில் இச்சேவையில் பரீட்சார்த்தி சேர்வதற்கான அவருடைய தகுதியை மதிப்பிடுதல் என்பதாகும். இச்சபையானது அவருடைய விவேகத்திற்கும் மனவிழிப் புணர்விற்கும் அவருடைய குண இயல்புக்கும் தலைமைத்துவத்திற்கான உள்ளார்ந்த தரங்களுக்கும் விசேட முக்கியத்துவம் வழங்கும். இந்த நேர்முகப் பரீட்சையில் பிற மொழிகளிலும் உயர் கல்வித் தகைமை களிலும் கணினித் தேர்ச்சிகள் முதலியவற்றிலுமான பரீட்சார்த்தி யொருவரின் திறமை நேர்முகப் பரீட்சையில் மதிப்பிடப்படும்.

(iv) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் புள்ளியிடல் திட்டமானது பின்வருமாறு :-

| | நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படுவதற்கு கிடைக்கக் கூடியனவாகவுள்ள தலைப்புகள் | தேசிய புள்ளிகள் | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | மேலதிக கல்வித் தகைமைகள்.- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டமொன்று : | | 20 |
| | (அ) 1 ஆவது வகுப்புடன் பெறப்பட்ட பட்டம் | 20 | |
| | (ஆ) 2 ஆவது வகுப்பு மேற் பிரிவுடன் பெற்ற பட்டம் | 15 | |
| | (இ) 2 ஆவது வகுப்பு கீழ்ப் பிரிவுடன் பெறப்பட்ட பட்டம் | 12 | |
| 2 | தொழில்சார் தகைமைகள்.- | | 20 |
| | (அ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து இயைபுள்ள துறையில் பெறப்பட்ட முதுமாணிப் பட்டம் | 20 | |
| | (ஆ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து இயைபுள்ள துறையில் பெறப்பட்ட பட்டப் பின் படிப்பு டிப்புளோமா (ஓராண்டுக்கும் கூடுதலான காலப்பகுதி) | 15 | |
| | (இ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து இயைபுள்ள துறையில் பெறப்பட்ட டிப்புளோமா (காலப்பகுதி : 6 மாதங்களுக்கு மேற்பட்டது/ 720 மணித்தியாலங்களுக்கு மேற்பட்டது) | 12 | |
| | (ஈ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து இயைபுள்ள துறையில் பெறப்பட்ட டிப்ளோமா (காலப்பகுதி : மூன்று மாதங்களுக்கும் மேற்பட்டது/360 மணித்தியாலங்களுக்கும் மேற்பட்டது) - கல்விநெறி ஒவ்வொன்றிற்கும் 5 புள்ளிகள் | 10 | |
| 3 | ஆங்கில மொழியில் தேர்ச்சி.- | | 15 |
| | (அ) ஆங்கில மொழியில் விசேட பட்டம் | 10 | |
| | (ஆ) பட்டப் படிப்பில் ஆங்கில மொழியை ஒரு பாடமாக எடுத்திருத்தல் வேண்டும். (பொதுக் கலைப் பட்டம்) | 08 | |
| | (இ) ஆங்கில மொழி மூலத்தில் பெற்ற பட்டம் | 08 | |
| | (ஈ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது தொழில் நுட்பக் கல்லூரியிலிருந்து அல்லது அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவகத்திலிருந்து பெறப்பட்ட டிப்ளோமா (ஓராண்டு காலத்திற்கும் மேற்பட்ட காலப் பகுதி) அல்லது TOEFL (TOEFL-IBT இல் 79 புள்ளிகள், TOEFL-CBT இல் 213 புள்ளிகள், TOEFL-PBT இல் 550 புள்ளிகள் அல்லது அதற்கு மேல்) அல்லது IELTS (6.0 புள்ளிகள் அல்லது அதற்கு மேல்) | 06 | |
| | (உ) ஒரு பாடமாக ஆங்கிலத்திலும் க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் (இலங்கை அல்லது இலண்டன்)- | | |
| | விசேட சித்தி | 05 | |
| | திறமைச் சித்தி | 04 | |
| | (ஊ) ஆங்கில பேச்சு மொழித் தேர்ச்சி | 05 | |
| 4 | வெளிநாட்டு மொழியில் தேர்ச்சி.- ஆங்கிலம் தவிர்ந்த பிற வெளிநாட்டு மொழியில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது அதற்கு மேல் மட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் அல்லது பதிவுசெய்யப்பட்ட அரசாங்க நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட கல்விச் சான்றுப் பத்திரப் பாடநெறி அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான பாடநெறி (காலப் பகுதி : 3 இற்கும் மேற்பட்ட மாதங்கள்/360 மணித்தியாலத்திற்கும் மேற்பட்டது) ஒவ்வொரு மொழிக்கும் 5 புள்ளிகள் (உச்சமாக 3 மொழிகள்) | | 15 |

| | நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படுவதற்கு கிடைக்கக் கூடியனவாகவுள்ள தலைப்புகள் | தேசிய புள்ளிகள் | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 5 | கணினி தேர்ச்சிகள்.- | | 10 |
| | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டமொன்று | 10 | |
| | (ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்து அல்லது பதிவுசெய்யப்பட்ட அரசாங்க நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட டிப்புளோமா பட்டமொன்று (காலப்பகுதி : 1 ஆண்டிற்கும் மேற்பட்டது) | 8 | |
| | (இ) பதிவுசெய்யப்பட்ட அரசாங்க நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட கல்விச் சான்றுப் பத்திரமொன்று (காலப் பகுதி : 6 மாதங்களுக்கும் மேற்பட்டது/ 720 மணித்தியாலங்களுக்கும் மேற்பட்டது) (தகவல் தொழில்நுட்ப பட்டம் என்பது அடிப்படைத் தகைமையாக இருக்குமிடத்து இந்த துறையின்கீழ் தகவல் தொழில்நுட்ப பட்டத்திற்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. | 5 | |
| 6 | உத்தியோகபூர்வ மொழிகளில் தேர்ச்சி.- அரச கரும மொழிகளிலும் இணைப்பு மொழியிலும் க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் அல்லது அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெறப்பட்ட கல்விச் சான்றுப்பத்திரம் அல்லது அதற்கு மேற்பட்ட பாடநெறிப் பத்திரம் (காலப்பகுதி : 3 மாதங்களுக்கும் மேற்பட்டது/ 360 மணித்தியாலங்களுக்கும் மேற்பட்டது) மொழி ஒவ்வொன்றுக்கும் 5 புள்ளிகள் வீதம் (உச்சமாக 2 மொழிகள்) | | 10 |
| 7 | ஆளுமை, முன்வைக்கும் திறன் மற்றும் விசேட உளச்சார்புகள்.- | | 10 |
| | மொத்தம் | | 100 |

*8.* **விண்ணப்பம் செய்வதற்கான முறை.-** (i) விண்ணப்பப்படிவங்கள் முதலாம் பக்கத்தில் 1-7 வரையுள்ள விடயங்களையும் 2 ஆம் 3 ஆம் பக்கங்களில் ஏனைய விடயங்களையும் கொண்டனவாக இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் ஏ-4 அளவுக் கடதாசியில் தயாரிக்கப்படல் வேண்டும். கடதாசியின் 2 பக்கங்களும் பயன்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தில் நிரப்பப்படல் வேண்டும். சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் தயாரிக்கப்படும் விண்ணப்பத்தில் பரீட்சையின் பெயர் விண்ணப்பத்தின் தலைப்பில் ஆங்கிலத்திலும்கூட எழுதப்படல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் அமைவுறாதவைகளும் உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாதவைகளுமான விண்ணப்பங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் ஒளிப்படப் பிரதியொன்றை வைத்திருக்குமாறு விண்ணப்பதாரர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

(ii) விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு கருதும் மொழி மூலத்திலேயே விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும்.

(iii) விண்ணப்பங்களின் முடிவுறுத்தல் திகதி 2014, சனவரி 31 ஆந் திகதியாகும். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம், ''பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை'' என்ற முகவரியில் விண்ணப்பத்தின் முடிவடைதல் திகதியன்று அல்லது அதற்கு முதல் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். முடிவடைதல் திகதிக்குப் பின்னர் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பத்தைக் கொண்டிருக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இலங்கை வெளிநாட்டுச் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013 (2014)'' என தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் (2 x 2 செ. மீ.) கூடு ஒன்று தயாரிக்கப்பட்டு அதற்குள் ''S'' தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

(iv) சகல விடயங்களிலும் பூர்த்திசெய்யப்படாத எந்த விண்ணப்பமும் நிராகரிக்கப்படுவதற்கு உட்படலாம். விண்ணப்பம் தபாலில் இழக்கப்பட்டது அல்லது தாமதிக்கப்பட்டது என விடுக்கப்படும் உரிமைக் கோரிக்கை எதுவும் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

(v) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. உரிய விண்ணப்பப்படிவத்தில் இப்பரீட்சைக்கு விண்ணப்பம் செய்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன் பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகைகளில் அறிவித்தல்கள் விடப்படும். இந்த அறிவித்தலின் பின்னர் 02/03 நாட்களுக்குள் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து விண்ணப்பதாரர் ஒருவர் அது பற்றி இந்த அறிவித்தலில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள தொடர்பு இலக்கங்கள் மூலமாக பரீட்சைகள்

திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். விண்ணப்பதாரரின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் போன்ற விபரங்கள் சுட்டிக் காண்பிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பம், கொடுப்பனவு பற்றுச்சீட்டு மற்றும் விண்ணப்பம் அனுப்பப்பட்ட பதிவுத்தபால் இலக்கம் தொடர்பிலான பற்றுச்சீட்டு ஆகியவற்றின் பிரதிகளை வைத்திருத்தல் விவேகமான தாகும்.

கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரர்கள் மேலே குறிப்பிடப்பட்ட முழு விபரங்களுடன் பெக்ஸ் (தொலைநகல்) மூலம் அனுமதி அட்டையின் பிரதி ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு கோரிக்கை விடுப்பது விவேகமானதாகும்.

9. **பரீட்சைக்கான அனுமதி.**- (i) இப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரர் அனுமதி அட்டையின் பின்பக்கத்திலுள்ள நியதிகளின் பிரகாரம் பரீட்சையின் முதலாம் நாளன்று பரீட்சை நிலையத்தின் மேற்பார்வையாளருக்குச் சான்றுப்படுத்திய தனது அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிப்பதற்குத் தவறும் விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் பரீட்சை நடைமுறைகள் மீதான விதி களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் விண்ணப்பதாரர் உட்படுத்தப்படுவர். அச்சட்டத்தை மீறும் விண்ணப்பதாரர் ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவர்.

(ii) விண்ணப்பதாரர் ஒருவர் தமக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் பரீட்சையின் முதலாம் நாளில் மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். சகல விண்ணப்பதாரர்களி னாலும் பின்பற்றப்பட வேண்டிய விதிகளின் தொகுதியொன்று இந்த வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

**குறிப்பு.**- விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் வர்த்தமானி அறிவித்தலில் வேண்டப்படும் தகுதிகளைக் கொண்டுள்ளார் என்ற அர்த்தத்தை தரமாட்டாது.

10. **பரீட்சைக்கான கட்டணங்கள்.**- இப்பரீட்சைக்கான கட்டணம் ரூ. 1,000 ஆகும். இக்கட்டணம் விண்ணப்பங்களின் முடிவுறுத்தல் திகதிக்கு முன்னராக அவருக்கு ஆகக்கிட்டிய மாவட்ட செயலகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் கொடுப்பனவு செய்யப்பட்டு வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரரின் பெயரின்கீழ் கொடுப்பனவு செய்யப்படுவதன் மீது வழங்கப்படும் பற்றுச்சீட்டு விண்ணப்பத்தின் இயைபுள்ள இடத்தில் ஒட்டப்படல் வேண்டும். பற்றுச்சீட்டின் ஒளிப்படப் பிரதியை வைத்தி ருத்தல் உபயோககரமானதாகவிருக்கும்.

**குறிப்பு.**- எக்காரணத்தின் நிமித்தமும் பரீட்சைக்குத் தோற்றாமல் விடுகின்ற அல்லது பரீட்சைக்கு வராமலிருக்கின்ற அல்லது பரீட்சைக்குத் தோற்றத் தகுதியற்றவர் எனக் காணப்படும் எந்தவொரு விண்ணப்ப தாரரும் பரீட்சைக் கட்டணத்தின் முழுத் தொகையையும் அல்லது பகுதித் தொகையையும் மீளப்பெறுவதற்கு உரித்துடையவராக மாட்டார்.

11. **விண்ணப்பதாரர்களின் அடையாளத்தை நிரூபித்தல்.**- விண்ணப்பதாரர் ஒருவர் பரீட்சைக்குத் தோற்றுகின்ற பாடம் ஒவ்வொன்றின்போதும் தமது அடையாளத்தை பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் நிரூபிக்குமாறு வேண்டப்படுவார். இந்நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களில் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகு நிலையிலுள்ள கடவுச்சீட்டு.

12. **பெறுபேறுகளின் வழங்கல்.**- பரீட்சைப் பெறுபேறுகள் வழங்கப் பட்டதன் பின்னர் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப் படுவதன் பிரகாரம் தனித்தனியாக விண்ணப்பதாரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்படும்.

13. **பொய்யான தகவல்களை வழங்குதல்.**- விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பிழையானவை என அல்லது பொய் யானவை என ஆட்சேர்ப்புக்கு முன்னர் காணப்படுமிடத்து அவருடைய பரீட்சார்த்த நிலை இரத்துச்செய்யப்படும். அத்தகைய பொய்யான அல்லது பிழையான விபரங்கள் ஆட்சேர்ப்புக்கு பின்னர் கண்டுபிடிக்கப் படுமிடத்து அவர் சேவையிலிருந்து சேவை நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவார்.

14. இந்த வர்த்தமானி அறிவித்தலில் தரப்படாத எந்த விடயமும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் கையாளப்படும். அரசாங்க சேவை ஆணைக்குழுவானது வெற்றிடங்களை முழுமையாக நிரப்புவ தற்கு அல்லது பகுதியளவில் நிரப்புவதற்கு அல்லது நிரப்பாமல் விடுவதற்கான உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.

15. பொருள் கோடல் தொடர்பில் ஏதாவது முரண்பாடு இருக்குமிடத்து சிங்கள மொழியிலான வாசகம் மேலோங்கி நிற்கும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

கருணாதிலக்க அமுனுகம,
செயலாளர்.

வெளிவிவகார அமைச்சு,
குடியரசுக் கட்டடம்,
கொழும்பு 01,
2013.12.11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

வெளிவிவகார அமைச்சு

**இலங்கை வெளிநாட்டுச் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2013 (2014)**
*Open Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Foreign Service - 2013 (2014)*

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

பரீட்சை எழுதும் மொழி மூலம் :
சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதுக.)

1. (i) (அ) முதலெழுத்துக்களுடன் கடைசிப் பெயர் (ஆங்கிலத்தில் தனிப் பேரெழுத்துக்களில்) :----.
(உதாரணம் : SUMANASIRI, E. D. C. B. A.)
(ஆ) முதலெழுத்துக்களுடன் கடைசிப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

(ii) (அ) முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்கள் (ஆங்கிலத்தில் தனிப் பேரெழுத்துக்களில்) :----.
(ஆ) முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்கள் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. முகவரி :

(i) பிரத்தியேக (ஆங்கில பேரெழுத்துக்களில்) :----.
(அனுமதி அட்டைகள் இந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப் படும்.)
(ii) உத்தியோகபூர்வ :----.
(iii) தொலைபேசி இலக்கங்கள் :
உத்தியோகபூர்வ :----.
வதிவிடம் :----.

3. பால் :
(ஆண்-0, பெண் 1)
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதுக.)

4. தேசிய அடையாள அட்டை இல. :

5. (i) பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

(ii) விண்ணப்ப முடிவுத் திகதியிலான வயது :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

6. தேசிய இனம் :
சிங்களம்-1, தமிழ்-2, இந்தியத் தமிழ்-3, முஸ்லிம்-4, ஏனையோர்-5
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதுக.)

7. சிவில் நிலை :
(விவாகமாகாதவர்-1, விவாகமானவர்-2)
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதுக.)

8. இலங்கை வெளிநாட்டுச் சேவை நியமனத்திற்காக நீங்கள் பரீட்சைக்கு முன்னர் தோற்றியிருந்தால் அப்பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டை/ஆண்டுகளைக் குறிப்பிடுக :

(i) :----.
(ii) :----.
(iii) :----.

9. நீங்கள் அரசாங்க சேவையில் பதவி வகிக்கும் பட்டதாரியொருவராக இருக்குமிடத்து அப்பதவியின் பெயரைக் குறிப்பிடுக :----.

10. பல்கலைக்கழக பட்டத்தின் விபரங்கள், இத்தொடர்பில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நீங்கள் தகைமையுடையவரா என்பது பற்றி அறிந்துகொள்வதற்காக இந்த அறிவித்தலின் 2(1) ஆம் பந்தியை வாசிக்கவும் :

(i) பல்கலைக்கழகத்தின் பெயர் :----.
(ii) பட்டம் :----.
(iii) பட்டம் பெற்ற திகதி :----.
(iv) பொது/சிறப்பு :----.
(v) பாடங்கள் :----.
(vi) வகுப்பு

11. உங்களுக்கு வேறு ஏதாவது கல்வி/தொழில்சார் தகைமைகள் இருக்குமிடத்து (பட்டப் பின்படிப்புப் பட்டம்/டிப்புளோமா/ வெளிநாட்டு மொழிகளில் வினைத்திறமை முதலியன) கீழே பின்வரும் தகவல்களை தரவும் :----.

12. இப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் சிறப்பாக எட்டிய வரையில் உண்மையானவை எனவும் நான் பரீட்சைக் கட்டணமாக கொடுப்பனவு செய்த ................................ இலக்கத்தையும் .................................... திகதியையும் கொண்ட பற்றுச்சீட்டை இத்துடன் இணைத்துள்ளேன் எனவும் பிரகடனப்படுத்துகின்றேன். நான் இப்பரீட்சையின் விதிகளுக்கு அமைவாக நடப்பதற்கும் நான் பரீட்சைக்குத் தோற்றும்போது அல்லது அதன் பின்னர் இப்பரீட்சையின் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக தகுதியற்றவன் எனக் காணப்படுமிடத்து எனது பரீட்சார்த்தி நிலையிலிருந்து என்னை நீக்குவதற்கு எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு கட்டுப்படுவதற்கும் இணக்கம் தெரிவிக்கின்றேன். மேலும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் பரீட்சை நடைமுறைகள் மீது விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு உட்படுத்தப்படுவதற்கும் நான் உடன்பாடு தெரிவிக்கின்றேன்.

பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும்.
(இப்பற்றுச்சீட்டின் ஒளிப்படப் பிரதியொன்றை வைத்திருக்கவும்.)

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

13. **திணைக்களத் தலைவரின்/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

(ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள/மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்)

திரு./திருமதி/செல்வி ............................................. ஆண்டுகளில் ............................................. ஆந் திகதிக்கு முந்திய ஆண்டுகளில் தமது சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளார் என்பதுடன் அவர் (எச்சரிக்கை நீங்கலாக) எந்தவிதமான ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் உட்படுத்தப்படவில்லையெனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

இந்த விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை எனவும், அவர் இயைபுள்ள கட்டணங்களைச் செலுத்தியுள்ளதுடன் இதன்கண் காசுப் பற்றுச்சீட்டை இணைத்துள்ளார் எனவும் நான் சான்றுப்படுத்துகின்றேன்.

இந்த உத்தியோகத்தர் தெரிவுசெய்யப்படுமிடத்து அவருடைய தற்போதைய பதவியிலிருந்து அவரை உடனடியாக விடுவிக்க முடியும்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவிப்பெயரும்.

திகதி :----.

12-1117

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

கமநல அபிவிருத்தித் திணைக்களம்

### கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் II ஆம் வகுப்பிற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013 (2014)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்குரிய கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு கீழ்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1.1 விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய 1 தொடக்கம் 7 வரையில் முதலாம் பக்கத்திற்கும் 8 தொடக்கம் 12 வரையில் இரண்டாவது பக்கத்திற்கும் உள்ளடக்கும் வகையில் தயாரித்துக்கொள்ளல் வேண்டும்.

1.2 பரீட்சார்த்தி தான் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத எண்ணியுள்ள மொழி மூலம், தனது சொந்தக் கையெழுத்தினால் விண்ணப்பப்படிவத்தை நிரப்புதல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பத்தின் தலைப்பில் மொழி மூலத்திற்குரிய இலக்கத்தை தரப்பட்டுள்ள கூட்டினுள் சரியாகக் காட்டப்படல் வேண்டும். மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படாது.

1.3 விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது அதன் தலைப்பில் பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடல் அத்தியாவசியமாகும்.

1.4 இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலம் 2014, மாச்சு மாதத்தில், உப அட்டவணை 1 இன்கீழ் காட்டப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் நடைபெறும். அதற்கமைய பரீட்சைக்குத் தோற்றவுள்ள நகரத்தையும் அதற்குரிய இலக்கத்தையும் முதலாவது மற்றும் இரண்டாவது விருப்பத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தில் தலைப்பில் காட்டப்பட்டுள்ள கூட்டினுள் சரியாகக் குறிப்பிடல் வேண்டும். பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்கும் நகரம்/நகரங்களை பின்னர் மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது. ஏதாவதொரு நிலையத்தின் பொருட்டு போதுமானளவு விண்ணப்ப தாரர்கள் இல்லையெனில் விண்ணப்பதாரியின் இரண்டாவது விருப்பத்திற்கமைய அண்மித்த வேறு பரீட்சை நிலையமொன்றிற்கு இடமளிக்கப்படும்.

1.5 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள், தனிப்பட்ட விண்ணப்பதாரர்களினால் நேரடியாகவும், அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரி எனில் தனது நிறுவனத் தலைவர் ஊடாகவும் 2014.01.27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் மட்டும் அனுப்பி வைத்தல் வேண்டும் :-

"பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

விண்ணப்பப்படிவம் இடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், "கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் II ஆம் வகுப்பிற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013 (2014) எனக் குறிப்பிடல் வேண்டும்.

1.6 பரீட்சை அறிவித்தலுக்கு அமைவற்ற, தாமதமாகி கிடைக்கப் பெறும் மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதுடன், தபாலில் ஏற்படும் தாமதங்கள் தொடர்பாக பொறுப்பேற்கப்பட மாட்டாது. (பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை வைத்திருத்தல் பயனுள்ளதாக அமையும்.)

**2. சேவையில் சேர்த்துக்கொள்வதற்கான நிபந்தனைகள் :**

2.1 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்தானது. விதவைகள் அநாதைகள் / தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

2.2 பொதுச் சேவையின் நியமனம் தொடர்பான தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10-12 வரையிலான பிரிவுகளும் செயற்பாட்டு நடைமுறை ஏற்பாடுகளும் ஏற்புடையதாகும்.

2.3 தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிப்பிரமாணத்திற்கும், திணைக்கள கட்டளைகளுக்கும், காலத்திற்கு காலம் அரசினால் விடுக்கப்படும் ஏனைய சட்ட திட்டங்கள் மற்றும் கட்டளைகளுக்கும் பணிதல் வேண்டும்.

**3. பொதுவான தகைமைகள் :**

3.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
3.2 சிறந்த நடத்தையும் நல்ல தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும் ;
3.3 சேர்த்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் கடமையாற்ற விரும்புதல் வேண்டும்.
3.4 விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று விண்ணப்பதாரர்களின் வயது 21 இற்குக் குறையாமலும் 35 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில் மற்றும் மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதன்று.

**4. கல்வித் தகைமைகள்.**- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

**5. ஆட்சேர்ப்பு முறை :**

5.1 எழுத்துமூலப் போட்டிப் பரீட்சையின் நிபந்தனைகள்.- எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு வினாவிற்கும் 40% புள்ளிகள் வீதம் அல்லது அதைவிடக் கூடுதலாகப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்களைத் தெரிவுசெய்து, அவர்கள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையில் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமைய ஆட்சேர்ப்புக்கள் இடம்பெறும்.

5.2 *எழுத்துக் பரீட்சைக்குரிய பாடவிதானம்.-* பரீட்சை பிரதானமான இரு வினாத்தாள்களைக் கொண்டதாகும் :

(1) *கிரகித்தல் பரீட்சை.-* (காலம் : 1 1/2 மணித்தியாலம்) - மொத்தப் புள்ளிகள் 100.

(2) *நுண்ணறிவுப் பரீட்சை.-* (காலம் : 1 1/2 மணித்தியாலம்) - மொத்தப் புள்ளிகள் 100.

(சித்தியின் பொருட்டு ஒவ்வொரு பாடத்திற்கும், மொத்தப் புள்ளிகளில் 40% புள்ளிகள் பரீட்சார்த்தியினால் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.)

(1) *கிரகித்தல் பரீட்சை.-* இவ்வினாத்தாளின் மூலம் சுருக்கமான கூற்றுக்கள் பல பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படும். சில வினாக்கள் அதன் கருத்தை ஒரு வாக்கியத்தில் உரைக்கும் பொருட்டு வழங்கப்படும். கீழ் கோடிட்டுள்ள சொற்களுக்கான விளக்கமளிக்கும் வினாக்களும் வழங்கப்படும். மேலும் சில கூற்றுகள் தொடர்பாக மாற்றுக் கூற்றுக்கள் பல பரீட்சார்த்திகளிடம் வழங்கப்படுவதுடன், இவற்றில் மிகவும் பொருத்தமான கூற்றை பரீட்சார்த்திகள் தெரிவுசெய்தல் வேண்டும். மேலும் சில கூற்றுக்கள் தொடர்பாக பரீட்சார்த்திகளிடம் பல வினாக்கள் வழங்கப்படுவதுடன் அவற்றின் பதில்களில் சரியான பதில் எதிர்பார்க்கப்படும். இவ்வினாக்கள் பரீட்சார்த்திகள் இக்கூற்றின் கருத்தினைப் புரிந்துகொள்ளும் முறையினை பரிசீலனை செய்யும் பொருட்டு தயாரிக்கப்படும்.

(2) *நுண்ணறிவுப் பரீட்சை.-* பரீட்சார்த்தியின் மொழி ஆற்றல் மற்றும் புரிந்துணர்வு, கணிதத் திறமையின் ஆற்றல்கள், விவாதத் தேர்ச்சி மற்றும் தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பன வற்றை மதிப்பிடும் வகையில் தயாரிக்கப்படும். பல்தேர்வு மாதிரியிலான வினாக்கள் அடங்கிய வினாப்பத்திரமாகும். சகல வினாக்களுக்கும் பதிலளித்தல் வேண்டும்.

5.3 பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகள் மூலமும் நடாத்தப்படும். இவ்விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் மாற்றப்படுவதற்கு பரீட்சார்த்திகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர் பரீட்சையின்போது தோற்றும் சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியிலேயே பதிலளித்தல் வேண்டும்.

5.4 *பெறுபேறுகளை வெளியிடல்.-* எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்தின் பொருட்டும் 40% புள்ளிகள் அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள பரீட்சார்த்திகளின் மொத்தப் புள்ளிகள் திறமை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுபேற்று அட்டவணை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்படும்.

அதற்கு மேலதிகமாக ஒவ்வொரு விடயத்தின் பொருட்டும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் மற்றும் மொத்தப் புள்ளிகள் அடங்கிய பெறுபேற்றுப் பத்திரம் தனிப்பட்ட முறையில் விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.

6. **சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்).-** பொது நிர்வாக சுற்றுநிருபம் 6/2006 (IV) இல் எம்என்-05-2006ஏ இன்கீழ் ரூபா 16,720-10 x 320-11 x 365-15 x 450-30,685.

7. **பதவி உயர்வு நடைமுறைவிதிகள்.-** கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு நடைமுறை விதி உரித்துடையதாகும்.

8. **பரீட்சைக் கட்டணம்.-** விண்ணப்பதாரரினால் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்தப்படவேண்டிய ரூபா 600 பணத்தை எந்தவொரு கமநல சேவைகள் நிலையத்திற்காயினும் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், கமநல சேவைகள் நிலையத்தின் மூலம் பணத்தைப் பெற்றுக்கொண்டதற்கான க. சே. நி./ 2(அ) என்னும் பற்றுச்சீட்டு வழங்கப்படும். இப்பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் குறித்த இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். பின் தேவையின் பொருட்டு பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்திருத்தல் சாலச்சிறந்ததாகும். எக்காரணம் கொண்டும் இப்பணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது.

9. **அரச மொழிக் கொள்கையை செயற்படுத்தல்.-** பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் 28.04.2007 ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 07/ 2007 இற்கமைய 01.07.2007 ஆந் திகதியின் பின்னர் சேவைக்காக சேர்த்துக்கொள்ளப்படும் அரச உத்தியோகத்தர்கள், சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியை அரச சேவைக்குச் சேர்ந்து 5 வருட காலத்திற்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

10. **கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்.-** விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலையொன்றில் அதிபரொருவர் அல்லது சமாதான நீதவானொருவரினால் அல்லது சத்தியப்பிரமாண ஆணையாளரொருவரினால் அல்லது சட்டத்தரணியொருவரினால் அல்லது முப்படையின் அதிகாரம்பெற்ற அலுவலரொருவரினால் அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அதிகாரியொருவர் அல்லது அரசாங்க சேவையின் நிரந்தர பதவிநிலைத் தரத்திலுள்ள அலுவலரொருவரினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். பரீட்சை ஆரம்பமாகும் தினம் பரீட்சகரிடம் தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திப் பெற்றுக்கொண்ட அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு கையொப்பத்தை உறுதிப்படுத்தாத அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்கும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

11. விண்ணப்பதாரர்களின் பொருட்டு அனுமதி அட்டை வழங்கப்பட்டதுடன், அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்தும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின், அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அது பற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தங்களிடம் வைத்துக்கொண்ட விண்ணப்பப் படிவத்தினதும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதிகளையும், பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட்ட பற்றுச்சீட்டையும், கொழும்பிலிருந்து வெளிப்பிரதேசம் எனின் அனுமதி அட்டையை அனுப்பிவைக்கும் பொருட்டு தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு தங்களின் வேண்டுகோள் கடிதத்துடன் பரீட்சைத் திணைக்களத்திற்கு தெரியப்படுத்துதல் மிகவும் பயனுள்ளதாக அமையும்.:

12. பரீட்சார்த்தியொருவருக்கு அனுமதி அட்டையொன்றை வழங்குவது அவர் பரீட்சையின் பொருட்டு தோற்றுவதற்கு தகைமையுடையவர் என ஏற்றுக்கொண்டதாகக் கருதுதலாகாது.

13. பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டையை அல்லது குடியகல்வு குடிவரவுத்திணைக்களத்தினால்வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ஆகியவை ஏற்றுக்கொள்ளப்படும்.

14. பரீட்சை நடைபெறு தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் உட்பட வேண்டி ஏற்படும்.

எம். ஏ. எஸ். வீரசிங்ஹ,
கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்.

கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
த. பெ. இல. 537,
கொழும்பு 07,
2013, திசெம்பர் 11.

(அலுவலகப் பாவனையின் பொருட்டு)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கமநல அபிவிருத்தித் திணைக்களம்**

*கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் II ஆம் வகுப்புக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013 (2014)*

*Open Competitive Examination for Recruitment to Grade II of Agrarian Development Officer in the Department of Agrarian Development - 2013 (2014)*

* எழுத்துப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

* பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் நகரம் மற்றும் நகர எண்கள் (வர்த்தமானி அறிவித்தலின் இணைப்பு 1 இற்கமைய) :

| எண் | நகரம் | நகர எண் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (முதலெழுத்தை இறுதியில் குறிப்பிட்டு ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(உ-ம் : SUNIL, A.B.)

(ii) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

3. (i) நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

(ii) அனுமதி அட்டை அனுப்பப்படவேண்டிய முகவரி : (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

4. பால் : ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

5. (i) பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

(ii) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

6. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.

விவாகமாகாதவர் -1
விவாகமானவர் - 2
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

7. தொலைபேசி இலக்கம் :

8. (i) பெற்றுக்கொண்டுள்ள பட்டமும் வருடமும் :----.

(ii) பட்டம் பெற்றுள்ள பல்கலைக்கழகம் :----.

(iii) சித்தியின் தன்மை : தரம்- சாதாரணம்/ கௌரவ I ஆம் வகுப்பு/II ஆம் வகுப்பு (மேல்/கீழ்)
விசேட/கௌரவ I ஆம் வகுப்பு/II ஆம் வகுப்பு (மேல்/கீழ்)

(iv) உரிய பாடங்கள் :----.

9. கமநல சேவைகள் நிலையத்தின் மூலம் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் இலக்கம், திகதி மற்றும் கமநல சேவைகள் நிலையத்தின் பெயர் : ----.

பற்றுச்சீட்டை இக்கூட்டினுள் கழறாதவாறு ஒட்டவும்.

10. **விண்ணப்பதாரரின் கூற்று**.- மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்தவரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிமொழிகின்றேன். மேலும் இங்கு குறிப்பிடப் பட்டுள்ள ஏதாவது ஒரு தகவல்கள் தவறானதும் உண்மையற்றதும் எனத் தெரியவருமாயின், அத்தெரிவு நியமனத்திற்கு முன்னர் தெரியவருமாயின், நான் தகுதியற்றவன் எனவும், நியமனத்தின் பின்னர் தெரியவருமாயின் எவ்விதமான நஷ்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் எனவும் நான் அறிவேன். மேலும் பரீட்சைகள் ஆணையாளரினால், பரீட்சை நடாத்தப்படுவது தொடர்பாகக விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் பெறுவேறுகள் வெளியிடுவது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் நான் அமைந்தொழுகுவதாகவும் உறுதியுரைக்கின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.

11. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.**- இங்கு கையொப்பம் இடப்பட்டுள்ள ...................................................... என்னும் முகவரியில் வதியும் திரு./திருமதி/செல்வி ...................................... என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும் அவரது கையொப்பத்தை .......................................... ஆந் திகதி என் முன்னிலையில் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின்,
பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

(தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களின் பொருட்டு மட்டும்)

12. விண்ணப்பதாரரான திரு./ திருமதி/ செல்வி ..................... .......................................... என்பவர் தற்போது இவ்வமைச்சில்/ திணைக்களத்தில் ........................................................ ஆக நிரந்தர/ தற்காலிக/ அமைய உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றார் எனவும், அவர் இப்பதவியின் பொருட்டு தெரிவுசெய்யப் படுவாராயின் சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் அறியத் தருகிறேன்.

...................................,
திணைக்களத்தின்/நிறுவனத்
தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

**அட்டவணை 1**

| மாகாணம் | நகரம் | நகர எண் |
|---|---|---|
| மேல் மாகாணம் | கொழும்பு | 01 |
| | கம்பஹா | 02 |
| | களுத்துறை | 03 |
| மத்திய மாகாணம் | கண்டி | 04 |
| | மாத்தளை | 05 |
| | நுவரஎலிய | 06 |
| தென் மாகாணம் | காலி | 07 |
| | மாத்தறை | 08 |
| | அம்பாந்தோட்டை | 09 |
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் | 10 |
| | மன்னார் | 11 |
| | வவுனியா | 12 |
| | முல்லைத்தீவு | 13 |
| | கிளிநொச்சி | 14 |
| கிழக்கு மாகாணம் | மட்டக்களப்பு | 15 |
| | அம்பாறை | 16 |
| | திருகோணமலை | 17 |
| வடமேல் மாகாணம் | குருநாகலை | 18 |
| | புத்தளம் | 19 |
| வடமத்திய மாகாணம் | அனுராதபுரம் | 20 |
| | பொலொன்னறுவை | 21 |
| ஊவா மாகாணம் | பதுளை | 22 |
| | மொனறாகலை | 23 |
| சப்ரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | 24 |
| | கேகாலை | 25 |

12-1184

---

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**

நிலஅளவைத் திணைக்களம்

நிலஅளவைத் திணைக்கள அளவை உபகரணத் தொழில்நுட்ப வியலாளர் பதவிக்கென நடத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சைக்குரிய தகைமைகள் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **வெற்றிடங்களின் எண்ணிக்கை.**- 06.

2. **பதவியின் தன்மை.**- நிலஅளவை நடவடிக்கைக்குரிய உபகரணங்களையும் கருவிகளையும் பராமரித்தலும் சீர்படுத்துதலும்.

3. (i) **தோற்றவேண்டிய பரீட்சை வினாத்தாள் :**

| பாடங்கள் | காலம் | அதியுச்சப் புள்ளிகளின் அளவு | சித்தியெய்த தேவையான புள்ளிகளின் அளவு |
|---|---|---|---|
| நுண்ணறிவு | 1 மணித்தியாலம் | 100% | 40% |
| பொது அறிவு (பதவிக்குரிய தொழில்நுட்ப அறிவு குறித்த வினாக்களும் உள்ளடங்கும்.) | 1 மணித்தியாலம் | 100% | 40% |

(ii) அவ்வினாத்தாள்களின் மூலம் பெறப்படும் முழுப்புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு நடைபெறும்.

4. **ஆட்சேர்ப்புத் தரம்.**- நிலஅளவை உபகரணத் தொழில்நுட்பவியலாளர் பதவியின் தரம் III.

5. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்.**- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள்/ தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும். நியமனம் மூன்றாண்டு கால தகுதிகாண் நிலைக்கு உள்ளாக்கப்படும். தெரிவுசெய்யப்படும் அலுவலர்கள் தலைமை அலுவலகத்தில் கொழும்பில் மாத்திரம் சேவையாற்றத் தயாராக இருக்க வேண்டும்.

இவ்வர்த்தமானப் பத்திரிகையில் ஆரம்பத்தில் உள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளுக்கு உட்படுதல் வேண்டும்.

6. **சம்பள அளவுதிட்டம்**.- எம்ரீ1-2006ஏ-ரூ. 14,425 - 10 X 145 - 11 X 170 - 6 X 240 - 14 X 320 - ரூ. 23,665

தர முறைமைக்கு அமைய உரித்தான ஆரம்ப சம்பளப் படிமுறை.

| தரம் | ஆரம்ப சம்பள படிமுறை | ஆரம்ப சம்பள அலகு |
|---|---|---|
| III | படிமுறை 1 | ரூ. 14,425 |
| II | படிமுறை 12 | ரூ. 16,045 |
| I | படிமுறை 23 | ரூ. 17,985 |

7. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையிலோ, மாகாண அரச சேவையிலோ, நிரந்தர பதவி வகிப்போர்க்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

8. **கல்வித் தகைமைகள்**.- 90% ஆன வெளிவாரி விண்ணப்ப தாரர்கள் கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர) பரீட்சையில் ஒரே தடவையில் ஐந்து பாடங்கள் அடங்கலாக இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ் அல்லது சிங்களம், விஞ்ஞானம், கணிதம்/எண்கணிதம் ஆகிய பாடங்களில் மூன்று திறமைச் சித்திகள் சகிதம் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தரம்) பரீட்சையில் தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதிகவியல் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் இலத்திரனியல் அல்லது இயந்திரவியல் விஞ்ஞானம் தொடர்பான ஓராண்டுப் பாடநெறியொன்றை பயின்றிருத்தல்.

9. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- நடத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து அரச நிர்வாகச் சுற்றறிக்கை இல. 15/90 இற்கும் உரிய சுற்றுநிருபங்களுக்கும் அமைவாக ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

10. சகல விண்ணப்பதாரர்களும் பதவிக்குரிய சகல தகைமைகளையும் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இறுதித் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்திருத்தல் கட்டாயமானதாகும்.

11. **விண்ணப்பப்படிவங்கள் மற்றும் ஏனைய விபரங்கள்**.- (அ) (i) இவ்வறிவுறுத்தலின் முடிவில் காணப்படும் மாதிரி விண்ணப் பப்படிவத்துக்கு அமைய 21 X 29 சென்ரி மீற்றர் (ஏ4) அளவிலான கடதாசிகளில் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தை தாமே தயாரித்துக்கொள்வதுடன் விண்ணப்பப்படிவத்தின் முதலாம் பக்கத்தில் இலக்கம் 1 முதல் 8 வரையும் இரண்டாம் பக்கத்தில் 9 முதல் 10 (iii) வரையும், மூன்றாம் பக்கத்தில் இல. 11 முதல் 16 வரையான பந்திகளையும் உள்ளடக்கி பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்ற பற்றுச் சீட்டை அதன் கீழ்ப்பகுதியில் ஒட்டுதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை வைத்து அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நிலஅளவை உபகரண தொழில்நுட்பவியலாளர் பதவி" எனக் குறிப்பிட்டு 2014, சனவரி 24 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னரோ "நிலஅளவை நாயகம், நிலஅளவைத் திணைக்களம், கிருள வீதி, நாராஹேன்பிட்டி, கொழும்பு 5" என்ற முகவரிக்கு பதிவஞ்சலில் அனுப்புதல் வேண்டும். (தனிப்பட்ட பெயருக்கோ அல்லது வேறேதேனும் முகவரிக்கோ அனுப்புதலாகாது.

(ii) பூரணமற்ற உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்யாத அல்லது தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் எதுவித அறிவுறுத்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

(iii) தபாலில் காணாமல் போகும் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பில் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

(iv) எந்தவொரு காரணத்துக்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.

(v) விண்ணப்பப்படிவம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

(ஆ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, முப்படைகளிலும் ஆணையிடும் தரத்திலுள்ள அதிகாரிகள் பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள ஒரு பதவியை வகிக்கின்ற உத்தியோகத்தர் அல்லது அரச நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 இன் தரப்படுத்தலுக் கமைய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்டங்களிலுள்ள ஒரு நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் ஆகியோரில் எவரேனும் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

12. கீழ்க்காணும் ஆவணங்கள் கோரப்படும் வேளையில் சமர்ப்பிக்கப் படல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;

(ii) கல்விச் சான்றிதழ் ;

(iii) அண்மையில் பெறப்பட்ட கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் ;

(iv) குணநலச் சான்றிதழ்கள் இரண்டு.

**கவனத்தில் கொள்ளவும்**.- ஆவணங்களையோ அவற்றின் பிரதி களையோ விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தனுப்புதல் ஆகாது.

13. ஏற்கனவே அரச சேவையில் ஈடுபட்டிருப்பவர்கள் தமது விண்ணப்பப்படிவங்களைத் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

14. பரீட்சைக் கட்டணம் ரூ. 800 ஆகும். எந்தவொரு மாவட்ட நிலஅளவை அலுவலகத்திலும் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் ஒட்டியிருத்தல் வேண்டும். காசுக் கட்டளைகளோ காசோலைகளோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

15. **பரீட்சை நிலையங்கள்**.- தலைமை அலுவலகத்தில் அல்லது வேறு பொருத்தமான நிலையமொன்றில் பரீட்சையை நடத்த ஆவன செய்யப்படும். பரீட்சை நடைபெறும் திகதி விண்ணப்பதாரர்களுக்குப் பின்னர் அறிவிக்கப்படும்.

16. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- விண்ணப்பங்களை அனுப்பியுள்ள மற்றும் அடிப்படைத் தகைமைகள் பூர்த்திசெய்துள்ள சகல பரீட்சார்த்திகளுக்கும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுமதி அட்டை தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அபேட்சகர்கள் பரீட்சை நிலையத்தில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்பட மாட்டாது. பரீட்சார்த்திகள் தமக்குரிய பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரர் ஒருவருக்குப் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ இப்பதவிக்குரிய தகைமைகளைப் பூரணப்படுத்தியவர் என்பதற்கோ அங்கீகாரமெனக் கருதப்படலாகாது.

17. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்தியொருவர் பரீட்சை மண்டபத்தில் அதன் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) அஞ்சல் மா அதிபரால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் அடையாள அட்டை ;
(இ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

18. **பொய்யான தகவல்களை வழங்குதலுக்கான தண்டனை**.- பரீட்சார்த்தி ஒருவருக்குரிய தகைமைகள் இல்லையென வெளிப்பட்டால் பரீட்சைக்குத் தோற்றுமுன்னரோ அல்லது பரீட்சை நடக்கும் காலத்திலோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எந்தவொரு வேளையிலும் அவரது பரீட்சார்த்தி உரிமை இரத்துச்செய்யப்படலாம். பரீட்சார்த்தியொருவர் சமர்ப்பித்துள்ள எந்தவொரு தகவலும் அது பொய்யெனத் தெரிந்துகொண்டே அவரால் வழங்கப்பட்டிருந்தால் அல்லது ஏதேனும் முக்கிய தகவலை மறைத்திருப்பது அவர் தெரிவுசெய்யப்பட்ட பின் தெரியவந்தால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்பட இடமுண்டு.

19. **மொழி மூலம்**.- இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கில மொழி மூலங்களில் நடத்தப்படுவதோடு, விண்ணப்பதாரர்களுக்குத் தாம் விரும்பிய மொழி மூலத்தில் அதில் தோற்ற முடியும். விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலத்தைப் பின்னர் மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது.

20. இந்நிபந்தனைகளில் உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பில் நிலஅளவையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

கே. தவலிங்கம்,
நிலஅளவையாளர் நாயகம்.

நிலஅளவைத் திணைக்களம்,
2013, திசெம்பர் 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**

நிலஅளவைத் திணைக்கள அளவை உபகரண
தொழில்நுட்பவியலாளர் பதவிக்கான திறந்த போட்டிப் பரீட்சை

[ ]
(அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்)

(தரப்பட்டுள்ள கூட்டுக்குள் குறியீட்டு இலக்கத்தை இடவும்.)

1. (i) முதல் எழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) : ----.
(ii) தமிழில் :----.
(iii) ஆங்கிலத்தில் :----.

2. முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்)–
(ii) தமிழில் :----.
(iii) ஆங்கிலத்தில் :----.

2. (i) நிரந்தர முகவரி (தெளிவான எழுத்துக்களில்) :----.
(ii) முகவரி உரித்தாகும் நிர்வாக மாவட்டம் :----.

3. பால் (ஆண்-M, பெண்-F) : [ ]

4. பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழிமூலம் :
(சிங்களம்-S. தமிழ்-T, ஆங்கிலம்-E) [ ]

5. இனத்தொகுதி :
(சிங்களவர்-1, இலங்கைத் தமிழ்-2, முஸ்லிம்-2, இந்தியத் தமிழ்-4, பர்கர்-5, மலாய்-6, வேறு-7) [ ]

6. (i) பிரதேச செயலாளர் பிரிவு :----.
(ii) கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.
(iii) குறித்த மாவட்டத்தில் எப்போதிலிருந்து வசிக்கின்றீர்கள் ? :----.

7. பிரசாவுரிமை :
பரம்பரையாக [ ]
பதிவின் மூலம் [ ]

8. தேசிய அடையாள அட்டை இல. :----.

9. (i) பிறந்த திகதி :
ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.

(ii) விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

10. கல்வித் தகைமைகள் :

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரங்கள் :
முதலாவது அமர்வு :
(1) பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டும் மாதமும் :----.
(2) சுட்டிலக்கம் :----.
(3) சித்தியெய்திய பாடங்கள் :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரங்கள் :
இரண்டாவது அமர்வு :
(1) பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டும் மாதமும் :----.
(2) சுட்டிலக்கம் :----.
(3) சித்தியெய்திய பாடங்கள் :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

(iii) க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரங்கள் :
(1) பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டும் மாதமும் :----.
(2) விண்ணப்பதாரியின் பரீட்சை சுட்டிலக்கம் :----.
(3) சித்தியெய்திய பாடங்கள் :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

11. வேறு தகைமைகள் :----.

12. நீர் எப்போதாவது குற்றச் செயலொன்றிற்கு நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டீரா ? : ----.

ஆம் ☐ இல்லை ☐

"ஆம்" எனின் அக்குற்றம் பற்றிய விபரங்களைத் தருக ? :----.

13. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட நிலஅளவை அலுவலகம் : ----.
பற்றுச்சீட்டிலக்கம் :----.
பணம் செலுத்தப்பட்ட திகதி :----.

14. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கெட்டிய வரையில் உண்மையானதும், சரியானதும் என்று நான் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்டுள்ள இப்பிரகடனம் பொய்யான தென உறுதியாகுமிடத்து நான் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு தகுதியற்றவனாவேன் என்றும் நியனம் பெற்றபின் அவ்வாறு உறுதியாகுமிடத்து சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

(இ) இப்பரீட்சை நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட இணங்கு கிறேன்.

(ஈ) ரூபா .............................. செலுத்திப்பெற்ற பற்றுச்சீட்டு உரிய இடத்தில் ஒட்டப்பட்டுள்ளது.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

15. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................................................ என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் நன்கு அறிந்துள்ளதாகவும், அவர் ......................... ............. ஆந் திகதி என் முன்னிலையில் மேற்கண்டவாறு கையொப்பமிட்டதாகவும் உறுதிசெய்கின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி முத்திரையால் சான்றுபடுத்தவும்).

பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும்.

16. **திணைக்களத் தலைவரின் பரிந்துரை**.- விண்ணப்பிப்பவர் இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கப்பட முடியும்/விடுவிக்கப்பட முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

12-1185

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.